106

TAMIL
CORRELATION READER
No. III

தொடர்முறை வாசகபாடம்.
மூன்றாவது

BY

T. V. CHELLAPPA SASTRY, B.A., L.T.,
Head Master, Late C. S. M. Institution, Madras.

Approved by the Text-Book Committee.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - APR 1914
MADRAS.

MADRAS:
ELLAPPA SASTRY & Co.

1912.

[**Price 3 Annas.**

TB
031,6 (3)
N12
170387

தமிழ்

தொடர்முறை வாசகபாடம்

மூன்றாவது

இது

டி.வி. செல்லப்பசாஸ்திரியார், பீ.ஏ., எல்.டி.,

எழுதியது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
6 - APR 1914
MADRAS.

சென்னை:

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு கம்பெனியார்

வெளியிட்டது.

1912.

காப்பிரைட்டு ரெஜிஸ்தர் செய்தது] [விலை அணா 3

120387
148
494.81186
TB
O31,6 B
M12

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
6 APR 1914
MADRAS.

பொருளடக்கம்.

எண்.	விஷயம்.	பக்கம்.
1.	காடி.	1
2.	ஆபத்தில் உதவாத நண்பன்	6
3.	,, ,, ,, பாட்டு	9
4.	யானை.	12
5.	ஒரு தையற்காரனும், யானையும்	17
6.	,, ,, ,, பாட்டு	20
7.	குரங்கு.	22
8.	,, ,, ,, பாட்டு	28
9.	ஒரு குரங்கும், நரியும்	30
10.	சிங்கம்.	34
11.	சிங்கமும், மூன்று எருதுகளும்	38
12.	சிலந்திகள்	40
13.	இராஜபுத்திரன், ஈ, சிலந்தி	44
14.	,, ,, ,, பாட்டு	48
15.	வாத்துக்கள்.	50
16.	பேராசையுடையவன் பெருந்துன்பம் அடைவான்	54
17.	மண்ணின் வகைகள்	57
18.	முதலை	60
19.	புலியும், முதலையும்	62
20.	பருத்தி.	64

21. துவாரமுள்ள பதார்த்தங்கள் 67
22. வடிகட்டல் 71
23. செடிகள் : பொது அமைப்பும், உறுப்புக்களும் 74
24. வேர்கள் 77
25. அன்னப்பறவை 81
26. ஆமையும், அன்னமும் 83
27. ,, ,, ,, பாட்டு ... 87
28. ஆந்தை 89
29. சுல்தானும், மந்திரியும் 92
30. ,, ,, ,, பாட்டு ... 96

செய்யுட்பாடம்.

31. வெற்றி வேற்கை 100

முகவுரை.

"காரிலேஷன்ரீடர்கள் (Correlation Readers) என்ற இத் தொடர்முறை வாசகபாடங்கள், சிறுவர்களுக்கு மிகவும் உபயோகமானவையேயாம். 'காரிலேஷன்' என்றால் பற்பல பாடவிஷயங்களைச் சம்பந்தப்படுத்திப் போதிப்பதாம். அதாவது, இங்கு, வாசகக்கட்டும், கரும்பலகை அப்பியாசமும், ஒன்றின் உருவத்தைக் களிமண்ணாற் செய்தல், குச்சி வைத்தல், விதை வைத்தல் முதலிய கிண்டர்கார்டன் அப்பியாசங்களும் ஆகிய பற்பல பாடவிஷயங்களை, வாசக பாடங்களில் சம்பந்தப்படுத்திப் போதிப்பது. இந்த முறை, விஷயங்கள் பிள்ளைகளின் மனத்தில் தெளிவாய்ப் பதியக் காரணமாகின்றது.

ஆதலால், இப் புத்தகத்தில், இம் முறையை அநுசரித்தே பாடங்கள் எழுதப்பட்டுள்ளன.

உபாத்தியாயர், பிள்ளைகளுக்குக் கற்பிக்கும்போது, அந்த அந்தப் பாடங்களில் உள்ள விஷயங்களைக்குறித்துப் பிள்ளைகளுடன், புத்தகத்தைத் திறக்காமலே, முதலில், சம்பாஷணை செய்யவேண்டும். (Conversation.) இதனால், பிள்ளைகளுக்கு, அந்த அந்தப் பாடங்களிற் கூறப்பட்ட விஷயங்கள், இவை இவை என்று நன்றாய் மனத்திற் பதியும்.

இனி, கதைப்பாடமா யிருந்தால், பிள்ளைகளுக்குக் கதையை முதலில் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சொல்லிப் பிறகு அதைக்குறித்துக் கேள்வி கேட்கவேண்டும்.

பிறகு, அந்தப்பாடத்தைப் பிள்ளைகள் புத்தகத்தைத் திறந்து, தாங்கள், மனத்திலேயேபடிக்கச்செய்யவேண்டும். (Silent Reading by the boys.) இப்படி, உபாத்தியாயர் முதலில் சம்பாஷணை செய்வதாலும், தாங்களும் மனத்திலே படிப்பதாலும் விஷயங்கள், அவர்களுக்கு நன்றாய்த் தெளிவாகின்றன.

ஆனால், அந்த அந்தப் பாடங்களிலுள்ள சிற்சில கடினபதங்களும், சிற்சில பாஷை நடைகளும் அவர்களுக்கு விளங்காமல் இருக்கலாம். ஆதலால், உபாத்தியாயர் புத்தகத்தைத்திறந்து, பாடத்தைப் படித்துக்காட்டி, அப்பாடங்களில் கொஞ்சம் கொஞ்சமாய் விஷயங்களையும், கடினபதங்களையும் எடுத்துரைப்பதோடு, இன்னும், அவற்றில் விளங்காத தொடர்களையும் விளக்கவேண்டும். (Model Reading by the teacher).

இவ்வாறு விளக்கும்போது, அவர்களுடைய பாடங்களில் வந்துள்ள தொடர்மொழிகள் முதலியவைகளையும், உதாரணமாய், அவை போன்ற வேறு சில தொடர்மொழிகளையும் கரும்பலகையில் எழுதிக் காட்டவேண்டும்.

அப்பால், அந்தப் பாடத்தைப் பிள்ளைகள் தாங்களே படிக்கும்படி செய்யவேண்டும். (General Reading.)

பின்பு, கரும்பலகையில் எழுதிய தொடர்களின் மூலமாயும், கதையின் மூலமாயும், கதையைச் சுருக்கமாய் எழுதச் சொல்லுதலாலும், வேறு சிற்சில பாட ச்சம்பந்தமானகேள்விகளாலும், வாக்கியங்களில் மறைந்துள்ள இடத்தில் தகுந்த சொற்களை அமைக்கும்படி செய்தல் முதலிய பல அப்பியாசங்களினாலும் அவர்களுக்கு வாசகக்கட்டைக் கற்பிக்கவேண்டும். (Composition).

அதற்கப்பால், அந்த அந்தக் கதையிலமைக்கப்பட்ட படத்திலுள்ள உருவத்தையும், அதன் சிற்சில அவயவங்களையும், உபாத்தியாயர் கரும்பலகையில் எழுதிக்காட்டி, அவற்றைப் பிள்ளைகளும் கற்பலகையில் எழுதும்படி செய்ய வேண்டும். (Drawing.)

பிறகு, பாடங்கள், கதையாயும், இருவர் சம்பாஷணை செய்வதற்கிடமுள்ளதாயு மிருந்தால், அப்படிப் பட்டவற்றைப் பிள்ளைகளைக்கொண்டு நாடகரூபமாய்ச் சம்பாஷணை செய்வித்தலோடு (Dramatising), மேற்கூறிய பாடசம்பந்தமான பாடலிருந்தால், அதையும் அவர்கள் பாடும்படி கற்பிக்கவேண்டும் (Songs). இதுவே கற்பிக்கும் முறையாம்.

இனி, இம் மூன்றும்பாட புத்தகத்தில், இம்முறையைப் பெரும்பாலும் அநுசரித்தேபாடங்கள் எழுதப்பட்டுள்ளன.

ஆகவே, உபாத்தியாயர், இப்புத்தகத்தில் ஒவ்வொரு பாடத்தின் அடியிலும், சம்பாஷணைக்கேள்விகள், வாசகக்கட்டு, கிண்டர்கார்டன் அப்பியாசம் என்ற இவை, மாதிரியாகக் கூறப்பட்டுள்ளனவாதலால், அவற்றைக் குறிப்புக்களாகக் கொண்டு, இன்னும் அவைபோல, அந்த அந்தப் பாடங்களுக்கு ஏற்ற வேறு பற்பல அப்பியாசங்களின் மூலமாய்ப் பாடங்களைப் பிள்ளைகளுக்குக் கற்பித்தல் வேண்டும்.

அரச மங்களம்.

[" மங்களமனி, மங்களமனி "—என்னும்

பாட்டைப்போல் படிக்க.]

பப்பபமக, பப்பபமக, பா--தபமகரீ
ஸாரிரீரீ, க்ாமரிஸ, காமரீநிஸா.

1. கற்றவர்களும் நற்றவர்களும் மற்றவர்களுமே
கலந்து தம்முள் களித்து நாளும் வாழ்த்துக் கூறவே,

2. எங்குந் தங்கு பொங்கு கீர்த்தி நன்குபடைத்தமன்
இங்கிலாந்தி லமர்ந்த வெங்கள் ஜார்ஜுமன்னரும்,

3. அம்மை மேரி அரசிதானும் அகங்களிக்கவே
செம்மை மிக்கு செழித்து நாளும் வாழ்க எங்கணும்

4. இந்தி யாவி லுள்ள வர்க்கும் இன்ப மூட்டு நம்
அந்த மான ஜார்ஜு மன்னர் அரசு வாழ்கவே !

5. பாரி லுள்ள பகைவர் என்றும் பண்பு கூறவே
பேரில் வெற்றி பெற்ற ஜார்ஜு மன்னர் போற்றியே !

6. இந்துக் களையும் சோந்த ஜனங்கள் போல வேன்றுமே
வந்த ளிக்கும் மன்னர் ஜார்ஜு வாழி வாழியே !

GOVERNMENT HOUSE CALCUTTA
GATE TO LUCKNOW
THE PROCESSION DELHI
H·M·KING·GEORGE·V
& H·M·QUEEN·MARY
IMPERIAL·DURBAR·DELHI

தமிழ்

புதிய வாசக பாடம்.

மூன்றாவது.

---

1. கரடி.

கரடி, கொடிய காட்டுமிருகங்களுள் ஒன்று. அது, ஏறக்குறைய நான்கடி உயரமும், ஏழடி நீளமும் உள்ளது. அதன் தேகம், மிகவும் கனமாயும் தடித்துமிருக்கும். கரடியின் உடம்பெங்கும் மயிர் அடர்ந்திருக்கும். பிள்ளை

களே! நீங்கள், "கரடிக்குப் பிடித்தவிடமெங்கும் மயிர்," என்னும் பழமொழியையுங் கேட்டிருப்பீர்களன்றோ!

கரடி, பெரும்பாலும், காய்கனி முதலியவற்றைத் தின்று ஜீவிக்கும். என்றாலும், சில, அப்பொழுதுதான் கொல்லப்பட்ட மிருகங்களின் மாமிசத்தையும் தின்னும். ஆனால், நாளான பிணத்தைத் தின்னாது. இனி, புலி சிங்கங்களோ என்றால், அவை, கரடிபோலக் காய்கனி முதலியவற்றைத் தின்னாமல், விரைந்தோடத்தக்க மான் முதலிய பிராணிகளையே தின்னும். இக்காரணம்பற்றியே, சிங்கம் முதலியன, மிகச் சுறுசுறுப்புள்ளன எனவும், கரடி அவ்வளவு சுறுசுறுப்புடையதன்று எனவும் அறியலாம்.

கரடிகளில் பலவகையுண்டு: அவை, வெண்கரடி, கருங்கரடி, பழுப்புநிறக் கரடி என மூவகையாம். அவற்றில் வெண்கரடி, பனிமிகுந்த பிரதேசமாகிய உத்தரமகா சமுத்திரத்தையடுத்த பிரதேசங்களிலேதான் பெரும்பாலும் காணப்படும். அது, அவ்விடத்திலுள்ள 'ஸீல்', 'வால்றஸ்' முதலிய ஜலஜந்துக்களையும் தின்று ஜீவிக்கும். கருங்கரடியும், பழுப்புநிறக் கரடியுமோ என்றால், அவை, உஷ்ணபிரதேசங்களிலேதான் பெரும்பாலும் காணப்படும்.

கரடிகளெல்லாவற்றிற்கும் மதுவில் விருப்பமதிகமாம். ஆதலால், அவை, மரங்களில் கட்டிய தேன்கூடுகளைப் பிரித்துத் தேனைப் பருகும்பொருட்டு, மரங்களில் ஏறுவதுண்டு. அங்ஙனம் அவை மரமேறுவது மிகச் சாதுரியமாயிருக்குமென்பர்.

கரடியின் முகம், பன்றியின் முகம்போல நீண்டும், நுனி குவிந்துமிருக்கும். அதன் கால்கள், மிக உறுதி

யாயும், பலமுள்ளவையாயுமிருக்கும். பாதங்களில், கூரிய நீண்ட நகங்களுண்டு. அவற்றிற்கு அந் நகங்களை, சிங்கம் முதலியபோல, வேண்டும்போது நீட்டவும் சுருக்கவும் சக்தியில்லை. இவை, பெரும்பாலும் பிராணிகளைக் கிழித்துத் தின்னுமல், காய்கனி முதலியவற்றையே தின்பதாலும், புலி முதலியனபோல, இதரபிராணிகளைப் பிடிக்க மெல்ல நடந்து செல்ல வேண்டுவதில்லை யாதலாலும், அந் நகங்கள் அவற்றிற்கு மேற்கூறியவாறே அமைக்கப்பட்டுள்ளனவென அறியவேண்டும்.

கரடியைப் பிடித்து, எளிதாய்ப் பழக்கலாம். அது, தன்னை எதிர்க்கும் பிராணியோடு சண்டைசெய்யும் காலத்து, தன் முன்னங்கால்கள் இரண்டையும் உயரத் தூக்கிப் பின்னங்கால்களால், மனிதனைப்போல நின்றுகொண்டு, எதிர்த்த பிராணியை, தன் மார்போடு இறுகப் பற்றி அதன் எலும்பை முறித்துக் கொல்லும் இயல்புடையது.

இனி, முற்கூறியபடி சீதள தேசத்தில் வசிக்கும் கரடிகள், சீதகாலம் மாறும்வரையில் நாலைந்துமாதம் அங்குள்ள குகையிற் படுத்துறங்கும். அவ்வாறு உறங்கச் செல்லுமுன், தமக்கு வேண்டியமட்டும் வயிருர உணவையுட்கொண்டே செல்லும். அப்பால், அவை, சீதகாலம் மாறியவாறே வெளிவருகையில் மிகவும் மெலிந்து காணப்படும்.

கரடியை, தோலுக்காகவும், மயிருக்காகவும் வேட்டையாடுவார்கள். கரடியின்தோல் தடிப்பாயும், உறுதியாயுமிருப்பதால், அதனுல் பை முதலியனவும், மயிரால் கம்பளங்களும் செய்யப்படும்.

சம்பாஷணைக் கேள்விகள்:—1. கரடி எங்கு வசிக்கும்? 2. அதன் தேகஅமைப்பு எப்படி? 3. கரடியின் வகை எத்தனை? 4. அதன் வழக்கம் யாது? 5. கரடியின் உணவென்ன? 6. கரடியை வேட்டையாடுவது எதற்கு? 7. கரடி, தன் எதிரிகளை எப்படிக்கொல்லும்?

வாசகக்கட்டு:—1. கரடியின் தேகஅமைப்பு முதலியவற்றைத் தலைப்பெயராக வைத்து, ஒவ்வொன்றையும் விவரமாய் எழுதும்படி சொல்லல். கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைக்க: 2. கரடியின் தேகம்—இருக்கும். 3. கரடி பெரும்பாலும்—தின்னும். 4. கரடிகளுக்கு—விருப்பம் அதிகம். 5. கரடிக்கு நகங்களை——சக்தியில்லை. 6. கரடி—பிராணியை மார்போடு பற்றிக்கொல்லும்.



கிண்டர்கார்டன் அப்பியாசம்:—1. கரடியின் உருவத்தைக் கற்பலகையில் எழுதுதல். 2. அதன் பாதத்தையும்,

முகத்தையும், அது நிற்கும் மாதிரியையும் தனித் தனி கற்பலகையில் எழுதுதல். 3. காடி போலக் களிமண்ணுற் செய்தல்.

2. ஆபத்தில் உதவாத நண்பன்.



ஒரு கிராமத்தில், 'சூக்ஷ்மபுத்தி', 'தற்புகழ்ச்சி' என்னும் இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். அவ்விருவரும் ஒன்றுகூடி, வேறோர் ஊருக்குப்போக உத்தேசித்துப்போய்க் கொண்டிருக்கையில், வழியில், மரஞ்செடிகள் அடர்ந்த ஒரு காட்டைக் கடந்துசெல்ல நேர்ந்தது. அக்காட்டிலோ, புலி, கரடி முதலிய துஷ்டமிருகங்கள் நிறைந்திருந்தன. ஆகையால், அங்கே போகும்போது, தற்புகழ்ச்சி என்பவன், சூக்ஷ்மபுத்தி என்பவனை நோக்கி, "நண்பனே! என்னுடைய சுபாவம் உனக்குத் தெரியுமா? என்னுடைய நண்பர்களுக்கு எவ்விதமான ஆபத்து வந்தாலும், அவர்களை

நான் ஒருபோதும் கைவிடமாட்டேன்,'' என்று, பலவித மாய்த் தன்னுடைய குணங்களையே புகழ்ந்து பேசினன்.

இப்படி இருக்கையில், அங்கு ஒரு புதரில் திடீரென்று பயங்கரமான ஓர் உறுமல் கேட்டது. உடனே தற்புகழ்ச்சி என்பவன், தனக்குச் சமீபத்திலிருந்த மரத்தில் ஏறிக்கொண்டான். அதுகண்ட சூக்ஷுமபுத்தி, தற்புகழ்ச்சி என்பவன் செய்ததுபோலத் தானும் விரைவாய் ஓடி ஒரு மரத்தில் ஏறிக்கொள்ள யத்தனித்தான். ஆனால், அப்படிச் செய்ய அவனால் ஆகவில்லை. என்றாலும், அவன் தன் மனோதைரியத்தை விடாமல், உடனே தரையில் விழுந்து, பிணம் போலக் கிடந்தான்.

அப்பொழுது, புதரிலிருந்து, பெரிய கரடியொன்று வெளியே வந்து, சூக்ஷுமபுத்தி யிருக்குமிடம் சென்று, அவனைப் புரட்டிப் புரட்டி மோந்து பார்த்தது. ஆனால், சூக்ஷுமபுத்தி, கரடி பிணத்தைத்தின்னாது என்பதைத் தெரிந்திருந்தானாகையால், எதற்கும் அசையாமல் பிணம் போலவே கிடந்தான்.

கரடி, தன்னால் ஆனமட்டும் புரட்டிப் புரட்டிப் பார்த்தும், அவன் பிணம்போலவே கிடந்தபடியால், அவனைப் பிணம் என்றே எண்ணி, விட்டுப்போயிற்று.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த தற்புகழ்ச்சி என்பவன், மிக்க பயத்தோடு மரத்தின்மேல் பதுங்கி இருந்தான். கரடி சென்றபின், அவன் அதிக சந்தோஷத்துடன் மரத்தி லிருந்திறங்கி, சூக்ஷுமபுத்தி யிருக்குமிடம் சென்று, "நண்பனே! இப்பொழுது கரடி, உன்னிடம் வந்து ஏதோ இரகசியம் சொல்லிவிட்டுப்போனதே! அது யாது?'' என்று கேட்டான். அதற்கு அவன், "உன்னைப்போல அதிகமாய்த் தற்புகழ்ச்சி செய்து, ஆபத்து

வருங்காலத்தில் சிநேகனைக் கைவிடுகின்ற துஷ்டரோடு நட்புக்கொள்ளவேண்டாம், என்று புத்தி சொல்லிற்று !" என மறுமொழி கூறினன். அதுகேட்ட தற்புகழ்ச்சி, வெட்கமடைந்து மவுனமாயிருந்தான்.

ஆகையால், தம்மைத்தாமே அதிகமாய்ப் புகழ்ந்து கொண்டு, சமயம் வாய்த்தபோது பிறர்க்கு ஒரு நன்மையும் செய்யாமல் கைவிடும் துஷ்டர்களிடம் சிநேகம் செய்யக் கூடாது.

சம்பாஷணைக் கேள்விகள்:—1. தற்புகழ்ச்சியும், சூக்ஷ்மபுத்தியும் எங்குச் சென்று கொண்டிருந்தனர் ? 2. அங்கு நேர்ந்தது யாது ? 3. அப்போது அவர்கள் செய்தது என்ன? 4. சூக்ஷ்மபுத்தி அவ்வாறு செய்யக்காரணமென்ன ? 5. தற்புகழ்ச்சி, அப்பால் செய்தது யாது ? 6. சூக்ஷமபுத்தி தற்புகழ்ச்சிக்குக் கூறிய பதில் என்ன? 7. இக்கதையின் நீதி யாது?

வாசகக்கட்டு:—1. இக்கதையைச் சுருக்கமாய்ச் சொல்லும்படி கேட்டல். 2. சிநேகர்கள் இருக்கவேண்டிய தன்மையைப் பற்றிச் சிற்சில வாக்கியங்கள் சொல்லும்படி கேட்டல். கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களையமைக்க : 3. அவர்கள்-கடந்து-நேர்ந்தது. 4. அக்காடு—நிறைந்திருந்தது. 5. தற்புழ்ச்சி—நோக்கிச் சென்றான். 6. அவன் தன்னுடைய—புகழ்ந்து பேசினன். 7. கரடியீன்—கேட்டது. 8. அவன் தரையில் விழுந்து—கிடந்தான்.

கிண்டர்கார்டன் அப்பியாசம்:—1. படத்தில் காட்டியபடி கற்பலகையில் எழுதுதல். 2. மனிதனுடைய அவய

வங்களைத் தனித்தனி எழுதுக. 3. இவற்றையே, களி மண்ணுற் செய்தலும், கடிதத்தைக் கத்தரித்தலும்.



3. ஆபத்தில் உதவாத நண்பன்: பாட்டு.

ராகம்-சாமா. தாளம்-ஏகதாளம்.

(தஸ தஸா-தஸ தஸா-தஸ ரிமக ரிககரீ
ஸாரி காம காரி ரீஸ ஸாரி ரீஸ ஸா தஸா.)

1. நண்பர்கள்—நாள்தோறும்
நன்குதவுதல் வேண்டுமே!
எங்கு மிங்ங னம்செய்கின்ற நண்பர் தம்மை நாடுவோம்.

2. இங்ஙனம்—எங்குமே
நன்கு தவுதல் நண்பதாம்
இங்ங னஞ்செய் யாதவர்கள் நண்பராவ தில்லைகாண் !

3. ஒருநாளில்—இருவர்தாம்
பெரிய காட்டிற் போயினர் [னர்.
போகையில் அவர்கள் அங்குப் பேசிக்கொண்டு போயி

4. அவர்களின்—பெயர்கள் தற்-
புகழ்ச்சி சூக்ஷ்ம புத்தியாம்
இவர்களொன்றுகூடி வேறே ரூர்க்குப்போக நேர்ந்தது.

5. நேரவே—நெருக்கமாய்
மரம டர்ந்த காட்டினைக்
கடந்து செல்ல நேர்ந்த தாகக் கால்வழியே போயினர்.

6. போகையில்—பெரிய தற்-
புகழ்ச்சி சூக்ஷ்ம புத்தியைப்
பார்த்து நேரி லிப்ப டித்தன் பண்புரைக்கலாயினன் :

7. "நண்பனே ! என் குணம்
நன்கு நானு ரைக்கக் கேள்:
என்குணத்தை எங்கும் நீயும் நன்கு காண லாகுமே !

8. நேசரைப்—பாசமாய்ப்
பரிந்து காக்க வல்லன் யான்
நேசர் தம்மை யெந்நாளும்மோசஞ்செய்வதில்லைகாண்.

9. அவர்களை—எவ்வித
ஆபத் திலும் யான் கைவிடேன்
அவர்க்குநேர்ந்ததுன்பந்தன்னையன்புடன் அகற்றுவேன்."

10. என்றவன்—சொல்லியே
கொஞ்ச தூர மேகவும்
அங்க கன்ற புதரி லுறுமல் கேட்கவும் நடுங்கியே.

11. முன்னவன் !—மிகவுந்தான்
பயந்து மரத்தி லேறவும் [தனன்.
பின்னவன் நிலத்திற்பழைய பிணத்தைப்போலக் கிடந்
12. பின்னவன்—பிணத்தினைக்
கரடி தின்ப தில்லை யென்ற
அன்னதன்மையறிந்தோனாக அங்ஙனம்அவன்செய்தான்
13. அவனையக்—கரடி யங்
கசைத் தசைத்துப் பார்த்துப் பின் [யேகிற்று !
“ இவனிறந்த பிணம்” தென்று யெண்ணி யெண்ணி
14. ஏகவும்—முன்னவன்
இறங்கி மரத்தி னின்றுந் தான் [றுபின்,
இனிய சூக்ஷ்ம புத்திகிடந்த இடைத்தைநோக்கிச்சென்
15. “அன்பனே ! அரிய வென்
ஆருயிர்த் துணைவனே ! [றே !
இன்றுகரடியுன்றன்செவியில் ரகச்ய மொன்று சொல்லிற்
16. அதனையான்—அறியவே
ஆசைகொண்டு கேட்கின்றேன் !”
எனவும், சூக்ஷ்மபுத்திதானுமிங்ஙனம் உரைத்தனன்:
17. “அன்பனே ! நின்னைப்போல்
அதிக மாப் புகழ்ந்து தன்னை
ஆபத்தொன்று வந்தபோது அகல்பவனை விட்டிடு !
18. விட்டிடு ! ! விட்டிடு ! ! !
வீணவன்றன் நண்பதாம் !”
என்று சூக்ஷ்ம புத்தி தானுமிங்ஙனம்இகழ்ந்தனன்.
19. என்னவே—தன்னைத்தான்
என்றுமே புகழ்ந்துகொண்டு
சொன்னபடியே சமயந்தன்னில் செல்பவனைக் கைவிடு

20. அவனை நாம்—அதமனென்று
அறிந்துவிடுதல் வேண்டுமே!
அவன்தன் நேசமென்றும் நமக்கும் அனர்த்தம் விளைத்
[தல் திண்ணமே!

4. யானை.



நிலத்தில் சஞ்சரிக்கும் பிராணிகள் எல்லாவற்றிலும் பெரியது யானை. அது, சாதாரணமாய் ஏழு அடி உயரம் வளரும். பதினான்கு அடி உயரமுள்ள யானையும் சில இடங்களில் உண்டு. அது, அந்த அந்தத் தேசத்தின் வளத்துக்குத் தக்கபடி பருத்திருக்கும்.

யானை; பார்ப்பதற்கு ஒருவிநோதமான ஜந்து. அதன் மேலுதட்டிலிருந்து நீண்டு தொங்கும் இரண்டு துவாரமு

ள்ள உறுப்புக்குத் தும்பிக்கை என்றுபெயர். அதன் இறுதியின் மேற்புறத்தில், நாலைந்து அங்குலம் நீளமுள்ள அவயவம் ஒன்று இருக்கின்றது. தும்பிக்கையின் இரண்டுபக்கங்களிலும்கொஞ்சம் மஞ்சள் நிறமான தந்தம், மேல் தவடையிலிருந்துமுளைத்து வளரும். அந்தத் தந்தம் நன்றாய் வளர்ந்தால், நாலைந்து அடிநீளத்திற்கு அதிகமாயிருக்கும். தந்தம் ஆண் யானைக்குத்தான் முளைத்திருக்கும். பெண் யானைகளுக்குச் சாதாரணமாய்த் தந்தம் முளைப்பதில்லை.

யானை கறுப்பு நிறமுடையது. ஆனால், வெகு நாளைக்குமுன், இந்துதேசத்தில் வெள்ளையானையும் இருந்ததாய்ச் சொல்லுகின்றார்கள். இப்பொழுது வெள்ளையானை கிடைப்பது அருமை.

யானையை, வெகு சுலபமாய்ப் பழக்கிச் சாந்தமாக்கலாம். அப்படி அதைச் சாதுவாக்கினால், அது பாகனிடத்தில் அன்பும், பணிவும் உடையதாயிருக்கும். மேலும் அது, தனக்கு இரைபோட்டுக் காப்பாற்றுகின்றவனிடத்தில் அதிகபக்ஷமுள்ளதாயிருக்கும்.

யானை அதிக புத்தியுடையது. அது, பாகன் சொல்வதைத் தெரிந்துகொண்டு, அவன் இஷ்டப்படி செய்யும். பாகன் கோபத்தோடிருப்பதையும், சந்தோஷத்தோடிருப்பதையும் அது தெரிந்துகொள்ளும். யானைக்கு ஞாபகம் அதிகம்.

யானைக்கு, புல், பூண்டு, கிழங்கு, கரும்பு, பழம், சில மரக்கிளைகள், தென்னைமட்டை முதலியவை உணவாகும். அது, மாமிசத்தை ஒரு போதும் தொடாது. ஆகையால் அது, 'சாகபக்ஷிணி' ஜாதியைச் சேர்ந்தது. இரையை

எடுத்தும், நீரை மொண்டும் வாயிற் சேர்ப்பதற்குத் தும்பிக்கையே உபயோகப்படுகின்றது.

யானை, இரண்டு மூன்று வருஷத்துக்கு ஒரு முறை குட்டி போடும். ஒரு தரத்தில், ஒரு குட்டிக்கு அதிகம் போடாது. யானைக்குட்டி, பிறக்கும்போது, ஒரு இளங் கன்றளவுதான் இருக்கும். அது சரியான அளவு வளருவதற்கு, இருபது வருஷத்துக்குமேல் செல்லும்.

யானை, மற்ற மிருகங்கள்போலல்லாமல், அதிக நீண்ட ஆயுளுடையது. அது ஏறக்குறைய இருநூறு வருஷம் ஜீவித்திருக்கும் என்கிறார்கள். மனிதர்களிடம் அகப்பட்ட யானை, ஏறக்குறைய நூறு வருஷம் ஜீவித்திருக்குமாம்.

யானை, ஆசியா கண்டத்தில், சீனா, பர்மா, கொச்சின் சீனா என்ற இடங்களிலும், வங்காளத்தின் தென்கீழ்ப்பாகத்திலுள்ள குளிர்ச்சியான காடுகளிலும், தன் இச்சைப்படி திருந்து விசேஷமாய்ச் சஞ்சரிக்கும். ஆப்பிரிக்காவில் செழிப்புள்ள வனங்களிலும், காப்பிரேரியா நாட்டிலுள்ள ஆற்றோரங்களிலும் கூட்டம் கூட்டமாய்ச் சஞ்சரிக்கும்.

யானை, சாதாரணமாய், மரம் செடிகள் அடர்ந்த காடுகளிலேதான் இருக்கும். அது வெகு தூரம் போவதாயிருந்தால், தனித்துச் செல்லாமல், கூட்டமாகக் கூடி, விசேஷ பலமும் அனுபவமும் உள்ளவை முன்னும், குட்டிகள் நடுவிலும், கிழத்தனமும் நடுத்தரமான பலமும் உள்ளவை பின்னுமாகச் செல்லும்.

யானை, பலவிதத்திலும் உபயோகமுள்ளது. சில இடங்களில் அது சுமை சுமக்கின்றது. சில இடங்களில், பாரமான பொருள்களை இழுத்துக்கொண்டு போகும். அரசர்கள் அதன்மீது ஏறி வேட்டைக்குச் செல்வார்கள். இந்து

ராஜாக்கள் அதை அலங்காரத்திற்காகவும், கௌரவத்திற்காகவும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்து ஆலயங்களிலும், விசேஷமாய்ப் பெருமைக்காக அதை வைத்திருக்கிறார்கள்.

யானை சாந்தமுள்ள ஜந்து. அது, தனக்குக் கோபமுண்டாகும்படி யாராவது தீங்கு செய்தாலல்லாமல், மற்றைச் சமயத்தில், சாதாரணமாய் எவர்க்கும் தீங்கு செய்வதில்லை. ஆயினும், அது ஒருவர் செய்த தீங்கை மறக்காமல், எப்போதும் மனத்திலேயே வைத்திருந்து, சமயம் வாய்க்குமிடத்து அவர்க்குப் பதில் தீங்குசெய்யும். இதற்குத் திருஷ்டாந்தமாகப் பின்வரும், 'ஒரு தையற்காரனும் யானையும்', என்ற கதையைச் சொல்வார்கள்.

சம்பாஷணைக் கேள்விகள்:—1. யானை எவ்வகைப்பிராணி? 2. அதன் உயரமும், நீளமும் எவ்வளவு? 3. யானையின் வழக்கமும், இரையும் யாவை? 4. தந்தம் எல்லா யானைகளுக்கும் இருக்குமா? 5. யானை, குட்டி போடுவது எப்பொழுது? 6. அது, எத்தனை வருஷம் ஜீவித்திருக்கும்? 7. யானை, எங்கெங்கே காணப்படும்? 8. வெள்ளையானையும் உண்டோ?

வாசகக்கட்டு:—1. யானையின் தேக அமைப்பு முதலியவற்றைத் தலைப்பெயராகக் கொடுத்து, ஒவ்வொன்றையும் விவரமாய் எழுதும்படி சொல்லல். 2. யானையைப்பற்றிச் சிற்சில கேள்விகள்கேட்டல். 3. யானையின் வழக்கத்தைச் சொல்லும்படி கேட்டல். கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை யமைக்க: 4. நிலத்தில்—பிராணிகள்—பெரியது—. 5. யானை, பார்ப்பதற்கு—ஜந்து. 6. துதிக்கையின்—கொஞ்சம்—தந்தம்—முளைத்து வளரும். 7.—சாதாரணமாய்—

முளைப்பதில்லை. 8. யானை—நிறமுடையது. 9. இப்பொழுது—கிடைப்பது—அருமை. 10. யானை அதிக—. 11. அது—சேர்ந்ததன்று.



கிண்டர்கார்டன் அப்பியாசம் :—1. யானையின் உருவத்தையும், அதன் அவயவத்தையும் தனித்தனி கற்பலகையில் எழுதுதல். 2. அவற்றைக் களிமண்ணாற் செய்தல்.

5. ஒரு தையற்காரனும் யானையும்.



முன் ஒருகாலத்தில், வங்காளதேசத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில் யானையொன்று இருந்தது. அது தன்னிடம் பழகிய யாவரிடத்தும், நாய்போல, அவர்கள் சொல்லியபடி நடப்பதல்லாமல், அவர்கள் அழைத்த இடங்களுக்கெல்லாம் அவர்கள் பின்னே போகும்.

அந்த யானையைப் பாகன் தினந்தோறும் அங்குள்ள ஆற்றங்கரைக்குத் தண்ணீர் குடிப்பதற்காக ஓட்டிக்கொண்டுபோவது வழக்கம். போகும்வழியில், ஒரு தையற்காரனுடைய கடையொன்றிருந்தது. அத் தையற்காரன் யானைப்பாகனுக்கு நண்பன். ஆகையால், பாகன், யானையைத் தினந்தோறும் நேரே ஆற்றங்கரைக்கு ஓட்டிக்கொண்டு போகாமல், அத் தையற்காரனிடம் சிறிது நேரம் பேசிக்

கொண்டிருந்து, பின்பு செல்வது வழக்கம். ஆற்றங்கரையி னின்று திரும்பி வரும்பொழுதும் அப்படியே செய்வான்.

இப்படி, ஒவ்வொருநாளும், பாகன், தையற்காரனிடம் பேசிக்கொண்டிருக்கையில், யானை அக் கடைக்காரனிடத் தில், தன் துதிக்கையை நீட்டி, ஏதாவது ஒன்றைக் கேட்ப துண்டு. அப்படி அது கேட்கும்பொழுதெல்லாம் அவன், பழம் முதலியவற்றை அதற்குக் கொடுத்துக்கொண்டே வருவான்.

இப்படியிருக்க, ஒருநாள் பாகன் கடைக்காரனோடு பேசிக்கொண்டிருக்கையில், அந்த யானை, வழக்கம்போல, ஏதாயினும் ஒன்றைப் பெறும்பொருட்டுத் தன் தும்பிக் கையை நீட்டியது. அப்பொழுது, தையற்காரன், பாகனி டம் ஏதோவொரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தமையால், யானையைக் கவனிக்கவில்லை. யானை, அது தெரியாமல், பலதரம் அவனைத் தன் தும்பிக் கையால் தொட்டுத்தொட்டுக் கேட்க, அவன், அதிக கோப ங்கொண்டு, தன் கையிலிருந்த ஊசியால் அதன் தும்பிக் கையில் குத்தினான். உடனே யானை, அவன்மேல் கறுவு வைத்துக்கொண்டது. ஆனாலும், அப்பொழுது அவனை அது ஒன்றுஞ் செய்யவில்லை.

அப்பால், பாகன், தையற்காரனிடம் பேசியானபிறகு, வழக்கப்படி ஆற்றங்கரைக்குச் சென்றான். யானை, தனக்கு வேண்டிய அளவு தண்ணீர் குடித்துவிட்டு, பின்பு தன் துதிக்கை நிரம்பச் சேற்றுநீரை மொண்டுகொண்டது.

திரும்பி வரும்போது, பாகனும், தையற்காரனும் பேசிக்கொண்டிருக்கையில், தன் தும்பிக்கையில் நிரப்பி வைத்திருந்த சேற்றுநீரை அக் கடையில் இருந்த உடுப்புக்கள் எல்லாவற்றிலும் படும்படி வீசி இறைத்தது.

உடனே, அவையாவும் கெட்டுப்போயின. ஆனால் தையற்காரன், தான் முன்பு அதை ஊசியாற் குத்தினகுற்றத்தை நினைத்து, அந்த யானையின்மீது கோபங்கொள்ளாமலிருந்தான். பாகனும் அதைத் தெரிந்துகொண்டு, யானைக்கொன்றுஞ் செய்யவில்லை.

இப்படி, அந்தயானை, தையற்காரன் தனக்குச் செய்த தீங்கை மனத்தில் வைத்துக்கொண்டு, சமயம் வாய்த்தபோது, அவனுக்குத் தீமையுண்டாக்கிற்று. ஆதலால், யானைக்கு, கூடுமானால் நன்மை செய்யவேண்டுமே யல்லது, அதற்குத் தீமை ஒருபோதும் செய்யலாகாது.

சம்பாஷணைக் கேள்விகள் :—1. இந்த யானை எங்கிருந்தது? 2. பாகனுடைய வழக்கம் யாது? 3. தையற்காரன் செய்வது யாது? 4. அப்பால், அவன், யானைக்கு யாது தீங்கு செய்தான்? 5. அது, அவனுக்குச் செய்தது யாது? 6 இதனால் அறியக்கூடியது என்ன?

வாசகக்கட்டு :—1. இக்கதையைச் சுருக்கமாய்ச் சொல்லும்படி கேட்டல். 2. இங்குக் காட்டிய படத்தை விவரிக்கும்படி சொல்லல். கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைக்க : 3. யானை தன்னிடம்—யாவரிடத்தும்—இருக்கும். 4. அவர்கள் சொல்லியபடி—கேட்கும். 5. அந்த யானையை—தினந்தோறும் ஆற்றங் கரைக்கு — குடிப்பதற்காக — வழக்கம். 6. உடனே யானை அவன்மேல் கறுவு—7. அப்பொழுது அவன்—ஒன்றும் செய்யவில்லை. 8. சேற்றால்—யாவும் கெட்டுப்போயின.

கிண்டர்கார்டன் அப்பியாசம் :—1. தையற்காரன் கடைபோலவும், சட்டை முதலிய உடுப்புக்கள் போலவும், தையற்காரன் போலவும் கற்பலகையில் எழுதுதல்

2. யானையின் துதிக்கைபோலக் கற்பலகையில் எழுதுதல். 3. அதையே, களிமண்ணாற்செய்தலும், விதை

வைத்தலும், கடிதத்தைக் கத்தரித்தலும். 4. யானை போலக் கடிதத்தில் ஊசியால் குத்துதல்.

6. தையற்காரனும், யானையும்: பாட்டு.

ராகம் – செஞ்சுருட்டி. தாளம் – ஏகதாளம்.

ஸாஸ ஸாரிகா — காத மாமரீ
ஸாக ரீக ஸரிஸ ஸாநி தநிப தாரி ஸா.

1. வாரும்பிள்ளைகாள்! வந்து சொல்வதைக்
கேளுமுங்கள் மனத்தில் நன்குகொள்ளும் பதியவே!

2. யானை செய்தியை—யாமுரைக்க நீர்
ஆசைகொண்டு கேட்க உங்கள் அறிவு பரவுமே!

3. முன்னோர் காலத்தில்—முதிய தேசமாச்
சொன்ன வங்கா ளத்தைச் சார்ந்த சிறிய கிராமத்தில்
4. இருந்த யானைதான்—எவரிடத்திலும்
அறிந்த நாயைப் போல அவர்கள்

அழைத்த விடஞ்செல்லும்

5. அதனைப் பாகன் நீர்—குடிக்க வாற்றுக்கு
அழைத்து நாளும் போவ னதனையறியும் பிள்ளைகாள்!
6. போகும் வழியிலே—பெரிய நண்பனே
யாகுந் தையற் கார னொருவன்

கடையொன் றங்குண்டு.

7. அந்தப் பாகனும்—அந்த நண்பனை
அணுகிநாளும் பேசிப் பின்னர் அகல்வன் அப்புறம்
8. இப்படித்தினம்—இருக்க யானையும்
அப்போதங்கு எதனை யேனும்

அவனிடம் பெறும்.

9. இங்ஙன் நாளுமே—இப்படிப் பெற
அங்குத் தையற் காரன் பாக னோடு அன்புடன்
10. பேசும் போதங்குப்—பெறும் பொருட் டொன்று
பெயர்த்தும் பெயர்த்தும் தோட்டுத் தோட்டுக்

கேட்க அவனங்கு

11. கையி லுள்ள தன்—கரிய ஊசியால்
ஐயோ! வென்று அலறுமாறு அதனைக் குத்தினான்
12. அந்த யானையும்—அங்கொன்றுஞ் செய்யா-
திந்தவிதம் கறுவு கொண்டு செய்த திப்படி:—
13. ஆற்றுக்குச் சென்று—அதன் துதிக்கையில்
சேற்று நீரைக் கொண்டு திரும்பிச் செல்லும் வழியிலே

14. வழக்கம் போலவே—வந்து பேசவும்
குழப்பமான சேற்று நீரைக் கொண்டு வீசவும்
15. உடைகள் யாவையும்—ஒருங்கு கெடவுமக்
கடைக்கு உரிய தையற்காரன் கருத்தி லிப்படி
16. எண்ணி னனவன்—என்றன் குற்றமே!
புண்ணுண்டாக வூசிகொண்டு குத்தி னேனன்றோ!
17. யானை தன்மையை—யான் அறிந்துமே
ஆனபுத்தி மயங்கி யதனை யங்ஙனஞ் செய்தேன்!
18. ஆன படியினால்—யானைக் கென்றும் நாம்
ஆன வரையில் நன்மைசெய்தல் அறிவு டைமையாம்.

7. குரங்கு.



குரங்கு ஒரு விநோதமான ஜந்து. அது, பெரும்பா லும், மனிதரை யொத்துளது. ஆனது பற்றியே, அதற்கு

'வானரம்' எனப்பெயர் வழங்குகின்றதென்பர். மனிதர்களுக்குக் கைகள் உபயோகமாதல் போலவே, குரங்குக்குக் கால்கள் நான்கும் உபயோகமாதலால், அதை, 'நான்கு கைப் பிராணி' என்றே சிறப்பாய்ச் சொல்வதுண்டு. இனி, மனிதர்களுக்குக் கையின் கட்டை விரல்போலவே, குரங்கின் ஒவ்வொரு காலின் கட்டை விரலிலும், பொருள்களைப் பற்றுவதற்கு ஏற்றதாய் அமைந்திருத்தல் காணலாம்!

ஆதலால் தான் அவை, அப்பாதங்களினால் மரக்கிளைகளை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு, சிறிதும் அபாயமின்றியே இலேசாய் அவற்றில் ஏறுகின்றன. குரங்கின் கைகள், காலைக்காட்டிலும் நீளமுள்ளவை. வானரம், மனிதர்களைப்போல, பின்னங்கால்களால் நிமிர்ந்து நிற்கமாட்டுமேயல்லாமல், அவர்களைப்போல நடக்கமாட்டாது.

குரங்கு, பெரும்பாலும் விருக்ஷங்களிலேயே யிருக்கும். அதனாலேதான் அதற்குச் 'சாகாமிருகம்' எனப்பெயர் வழங்கும், மனிதர், பூமியில் சாதாரணமாய் ஓடியாடித் திரிவது போல, குரங்கு, மரங்களில் சாதாரணமாய்ச் சாயாமலும் சறுக்காமலும் ஓடியாடித் திரியும். அது, கையாற் பற்றுவது போலவே, காலாலும் பற்றும் இயல்புடையது.

குரங்குகளிற் பலவகை நிறமும், பலவகை பேதமு முண்டு: வாலில்லாக் குரங்கு, குட்டைவாற் குரங்கு, நீள



வாற் குரங்கு என்பனவாம்: வாலில்லாக் குரங்கு, ஏறத் தாழ உருவத்தில் மனிதர்போலவே காணப்படும். குட்

டைவால் குரங்கோ என்றால், அது, உருவத்தில் நாய்கள் போன்றிருக்குமென்பர். சில குரங்கு பூனை அவ்வளவு பரிமாணமுள்ள தாயிருக்கும். 'உறுங் உடாங், 'சிம்பன்ஸி' 'கிப்பன்' என்று சொல்லப்படும் குரங்குகள் வாலில்லாக் குரங்கினத்தைச்சேர்ந்தவை. குட்டைவால் குரங்கை பாபூன் இனம் என்றும் சொல்வதுண்டு. நமது தேசத்தில் காணப்படும் சாதாரணக் குரங்குகளெல்லாம் நீளவால் குரங்கினத்தைச் சேர்ந்தவை.



வானரம் பெரும்பாலும் உஷ்ண தேசங்கள் எல்லாவற்றிலும் வசிக்கும்; என்றாலும், உருவத்தில் மிகப் பெரியவையாயுள்ளவை, மரங்கள் அடர்ந்த காடுகளிலே தான் விசேஷமாய்ச் சஞ்சரிக்கும். ஆனால், அவற்றை நாம் அதிகமாய்க் காண்பதரிது. இனி, சிலகுரங்குகளோ என்றால், அவை, அங்கங்கே நாடு நகரங்களுக்கு அருகிலுள்ள தோட்டங்களிலும், தோப்புக்களிலு மிருந்துகொண்டு, அப்போதப்போது, அங்கிருந்து, அடுத்துள்ள கிராமங்களிற் கூட்டம் கூட்டமாய்ச் சென்று சஞ்சரிக்கும்.

குரங்கு, காய், கனி கிழங்குமுதலியவற்றைத்தின்னும். ஆனால், அதற்குக் கரும்பை முறித்துத் தின்பதில் விருப்பம் அதிகம். இனி, வயல்களிலுள்ள சோளம் முதலிய தானியங்களையும் தின்னும். இன்னும், நீள வாலுள்ள சில குரங்குகள், எறும்புகளையும், பறவை முட்டைகளையும் தின்னும்; தேன் கூட்டிலுள்ள தேனையும் குடிக்கும்.

இனி, குரங்குகளிற் சிறு பான்மையானவை மனிதர் செய்யும் செய்கையைப் பார்த்தால், தாமும் அவ்வாறே செய்யும் தன்மை யுடையன.

சம்பாஷணைக்கேள்விகள்:—1. குரங்குகள் எங்குவசிக்கும்? 2. குரங்குகளின் உணவென்ன? 3. குரங்குகளின் வகை எத்தனை? 4. அவை, என்னென்ன? 6. குரங்குகளின் வழக்கம் யாது?

வாசகக்கட்டு:—1. குரங்குகளின் தேக அமைப்பு முதலியவற்றைத் தலைப் பெயராக்கொண்டு. ஒவ்வொன்றையும் ஒன்றன் கீழ் ஒன்றாய் விவரமாய் எழுதும்படி சொல்லல். கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைக்க: 2. மனிதர்களுக்குக் கையின்— போலவே — ஒவ்வொரு — கட்டைவிரலும் — பற்றுவதற்கு— அமைந்திருத்தல் காணலாம். 3. குரங்கு— பலவகை நிறமும்—பேதமும்—.

கிண்டர்கார்டன் அப்பியாசம்:—1. குரங்குகளின் பேதங்களைக் கற்பலகையில் எழுதிக்காட்டுக. 2. அவற்றை,



களிமண்ணுற் செய்தலும், கடிதத்தில் ஊசியால் குத்துதலும், கடிதத்தைக் கத்தரித்தலும்.



8. குரங்கு: பாட்டு.

ராகம்-நாதநாமக்கிரியை. தாளம்-ஏகதாளம்.

ஸரி மமம காம கரி ஸாரிஸநி ஸரிகா
(காமகரி ஸநிஸா)

கமபபம காமகாரி

(க்ாமகாரி ஸநிஸா)

1. குரங்குகளின் இயற்கையினைக் கூறுகின்றோம் கேளீர்
கூறுகின்றோம் கேளீர்!!
குரங்குகள்தாம் கூத்தனைப் போல்
குதித்திடுதல் காணீர்!

2. குரங்குகள்தம் கால்களையே
கைகளைப்போல் கொள்ளும்!
குரங்குகளை நான்குகை நற்
பிராணியென்றே சொல்வர்.

3. குரங்குகளின் கட்டை விரல்
மனிதர்விரல் போலும்—.
குரங்குகளவ் விரல்களினல்
மரக்கிளையில் தொத்தும்

4. குரங்கு பின்னங் கால்களினல்
நிற்கும்; நடந்துபோகா.
குரங்குமரங் களிலேயே
குடியிருத்தல் காணீர்!

5. ஆதலினு லவைசாகா
மிருகமென்பர் அறிந்தோர்—.
அதனையும் நீர் அறியுங்கள்
அன்புமிக்க சிறியீர்!

6. குங்குகளின் வகைபலவாக்
கூறுதலைக் கேளீர்!—
வாலில்லாக் குரங்கு குட்டை
வாற் குரங்கா மின்னும்

7. வால்நீளக் குரங்கென்றே வகை
மூன்று மென்பர்—.
வாலில்லாக் குரங்கதுவோ
மனிதரையே போலும்.

8. வால்குட்டைக் குரங்குருவம்—
மானும் நாயி னுருவம்—

சிலகுரங்கு பூனையைப்போற்
சிறியவையாம் பாரீர்!

9. பலகுரங்கு பெரும்பாலும்
காய்கனிகள் புசிக்கும்—.
சிலகுரங்கோ எறும்புகளைத்
தின்னுதலும் பாரீர்!

10. பலகுரங்கு மரமடர்ந்த
காடுகளிற் பயிலும்—.
சிலகுரங்கு மனிதர் செயும்
செயலையுந் தாம்செய்யும்.

9. ஒரு குரங்கும், நரியும்.

முன்னொருகாலத்தில், காட்டிலிருந்த மிருகங்கள் யாவும் ஒன்று கூடி, அறிவின்மையால், குரங்கொன்றைத்

தமக்கு அரசனுக ஏற்படுத்திக் கொண்டன. அக்குரங்கு, அதிகமாய்க் கூத்தாடித் தன் சேஷ்டைகளால் அம்மிரு கங்களைக் களிப்பித்து, தான் சிறந்த அறிவுள்ளது போல அபிநயம் செய்தது. ஆனல், அங்கிருந்த நரியொன்று, இவ்வாறு மிருகங்கள் குரங்கை அரசனுகக் கொண்டது சரியன்று என எண்ணங் கொண்டது. ஆதலால், அந்நரி, அம்மிருகங்களுக்கு; தாம் செய்தது பிசகு என்று தெரிவிக்குப் பொருட்டும், குரங்கின் இறுமாப்புக்குத் தக்க தண்டனை செய்தற்பொருட்டும் சமயம் பார்த்திருந்தது.

இப்படி இருக்க ஒரு நாள், அங்கே, ஒரு மாமிசத் துண்டத்துடன் யந்திரமொன்று வைக்கப்பட்டிருந்தது. அது கண்ட அந்நரி, உடனே வானரத்தருகே சென்று, "வேந்தனே! அங்கு ஓர் வெளியிடத்தில் மாமிசத்துணிக் கையொன்று கண்டேன். அப்படி வெளியிடத்திற் காணப் படும் பொருள் அரசனுடையதாதலால், அதனைத் தங்களுக்கு அறிவிக்க வந்தேன்! தாங்கள் வந்து அதனைப் பெற வேண்டும்!" என்றது.



உடனே, வானரம் விரைவாய் அங்குச் சென்று அம் மாமிசத்தைப் பற்றுவதற்கு அந்த யந்திரத்திற் கை

வைக்க, அதில் அகப்பட்டுக் கொண்டது. அப்போது அது, நரியைப்பார்த்து, "ஏ நரியே! நீ அயோக்கியன்! ராஜத்துரோகி!! உன்னைத் தக்கபடி நான் தண்டிக்கின்றேன்," என அதை நிந்தித்தது. அதற்கு நரி, வானரத்தைப்பார்த்து மிகவும் நகைத்து, யந்திரம் என்பதறியாத நீயும்ஒரு வேந்தனு!" என்று இகழ்ந்துரைத்துக்கொண்டே போயிற்று.

ஆதலால், எவரும், தாங்கள்சாமர்த்தியத்திற்குத் தக்க காரியங்களையே செய்யவேண்டும். சக்திக்கு அதிகமான காரியஞ் செய்தல் ஆபத்திற்கிடமாகும்.

சம்பாஷணைக் கேள்விகள்:—1. மிருகங்கள் யாது செய்தன? 2. குரங்குசெய்தது என்ன? 3. நரி நினைத்தது யாது? 4. அப்பால் அது செய்தது யாது? 5. குரங்குக்கும், நரிக்கும் நடந்த சம்பாஷணை யாது? 6. இக்கதையின் நீதி யாது?

வாசகக்கட்டு:—இக்கதையைச் சுருக்கமாய்ச் சொல்லும்படி கேட்டல். 2. நரியைப்பற்றியும், குரங்கைப்பற்றியும் சிற்சில வாக்கியங்கள் சொல்லச் சொல்லல். கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைக்க: 3. முன்னொரு—காட்டில்—மிருகங்கள்—ஒன்றுகூடி—குரங்கொன்றை — அரசனாக—4. அக்குரங்கு—கூத்தாடி–சேஷ்டைகளால்–களிப்பித்தது. 5. அங்கே—துண்டத்துடன்—வைக்கப்பட்டிருந்தது. 6. வானரம்—அங்குச்சென்று—பற்றுவதற்கு — யந்திரத்தில்—வைத்தது. 7. "ஏ நரியே! நீ—உன்னைத்தக்கபடி தண்டிக்கிறேன்." 8. எவரும் தங்கள் சாமர்த்தியத்திற்கு—காரியங்களையே—வேண்டும். 9. சக்திக்கு—காரியம்—ஆபத்திற்கிடமாம்.

கிண்டர்கார்டன் அப்பியாசம்:—1. இங்குக் காட்டியபடம்

போல எழுதுதல். 2. இங்குக் காட்டியபடி, நரி

போலவும் குரங்குபோலவும், குரங்கின்முகம்போல வும், அதன் கை போலவும் தனித்தனி எழுதுதல்.

10. சிங்கம்.



சிங்கம், காட்டில்வசிக்கும் மிருகங்களுள் அதிக கம்பீரமும் பராக்கிரமமும் உள்ளது. இதர பிராணிகளை அடிக்கும் வலிமை அதற்கு இருப்பதாலும், அதனை அடிக்கவல்ல வேறு மிருகங்கள் இல்லாமையாலும், அதற்கு, 'மிருகேந்திரன்' என்று பெயர் வழங்குகின்றது. அது விசேஷமாய் ஆப்பிரிக்கா கண்டத்திலும், ஆசியா கண்டத்தின் சில பாகங்களாகிய அரேபியா, பாரசீகம், வட இந்தியா ஆகிய சில தேசங்களிலுமுள்ள அடர்ந்த காடுகளிலும் சஞ்சரிக்கின்றது.

நன்றாய் வளர்ந்த சிங்கம், நாலு, அல்லது ஐந்து அடி உயரமும், எட்டு, அல்லது ஒன்பது அடி நீளமும் உள்ளது. அதன் வால் சற்றேறக்குறைய நான்கடி நீளமிருக்கும். சிங்கம், சாதாரணமாய் மங்கலான கபிலவர்ணமுடையது.

அதன் கால்களில் தசைநார்கள் பருத்துப் பலமுள்ளவை யாயிருக்கும். பாதங்களில், நீண்டு கூரிய நகங்கள் உண்டு. அந்த நகங்களை, வேண்டும்பொழுது நீட்டவும் சுருக்கவும் கூடும். சிங்கத்தின் முகத்தில், நீண்ட மீசை உண்டு. அம் மீசையால் அது இராக்காலங்களில், மாஞ்செடிக ளிருக் கிறதைத் தெரிந்துகொண்டு, அவைகளினின்று விலகிச் செல்லும். ஆண்சிங்கத்திற்குக் கழுத்தில், கறுத்து அடர்ந்த மயிர் உண்டு. அது, முழங்கால் வரையில் எட்டும். அதற்குப் 'பிடரிமயிர்' என்று பெயர். சிங்கத்தின் மற்றைப் பாகங்களில் மயிர் குறுகியிருக்கும். வாலின் நுனியில் அது கொத்தாயிருக்கும்.

சிங்கம், மகாபராக்கிரம முள்ளதாதலின், அது சில வேளைகளில், பெரிய எருதையும், தன் வாயிற் கவ்விக் கொண்டு, வெகு இலேசாய் ஓடும். பதினைந்து அடித் தூரத் திலுள்ள மிருகத்தின் மீது ஒரே பாய்ச்சலாய்ப் பாயும்.

சிங்கம், இராக்காலங்களில் வேட்டையாடப்புறப்படும், அப்போது, தனக்கு இரை எதுவும் அகப்படாவிட்டால். தன்னுடைய முகத்தைப் பூமிக்குச் சமீபத்தில் வைத்துக் கொண்டு, அதிக பயங்கரமாகக் கர்ஜிக்கும். அதன் கர்ஜனையோ, இடிமுழக்கம்போலிருக்கும். ஜந்துக்கள் அந்த ஒலியைக் கேட்டவுடன், நடுநடுங்கி, தாங்கள் இருக்கும் இடம்விட்டு, நான்கு திக்குக்களிலும் ஓடும். அப்போது சிங்கம், பிராணிகளின் அரவத்தைக் கேட்டு, அவ்வரவம் வருந்திசைநோக்கிச் சென்று, அங்கு ஓடும் பிராணிகளின் மீது பாய்ந்து, அவற்றைக் கொன்றுவிடும்.

சிலபிராணிகள், மனம்பதைத்துத் திசை தெரியாமல் சிங்கமிருக்கும் இடத்துக்கே வந்து சேர்வதும்முண்டு. சிங்கம், தான் அடித்துக்கொன்ற பிராணியை, அவ்விடத்தி

லேயே தின்றுவிடும். அப்படி அங்குத் தின்பதில், தனக்கு ஏதேனும் தீங்கு நேரும் என்று தோன்றினல், அதைக்கவ் விச் செந்தூக்காய்த் தூக்கிக்கொண்டு புதருக்குள் புகும். அது, பெரிய கஜத்தையும் எதிர்க்கும் ஆற்றலுடையது.

பெண்சிங்கம், ஆண்சிங்கத் தவ்வளவு உயரமில்லாவிட் டாலும், அதுபோலவே, வலிமையும் பராக்கிரமமும் உள் ளது. பெண்சிங்கம், தன்குட்டிகளோடிருக்கும்போது, ஆண்சிங்கத்தைக் காட்டிலும் அதிக குரூரமுள்ள தாயிருக் கும். பெண் சிங்கத்திற்குப் பிடரிமயிர் இல்லை. அதன் வயிற்றிலும் விலாவிலுமுள்ள உரோமங்கள், சற்று நீண்டு வெண்மையாயிருக்கும். பெண்சிங்கம், வருஷத்துக்கொரு முறை நாலைந்துமாதம் சூல்கொண்டிருந்து, ஈற்றொன்றுக்கு மூன்று நான்கு குட்டி போடும்.

சிங்கம், காட்டுமிருகங்களில் ஒன்ருயினும், புலி, கரடி முதலானவைபோல, அவ்வளவு குரூர முள்ள தன்று. அது, பசியால் வருந்தினலொழிய இதர பிராணிகளைக் கொல்வதில்லை. மேலும், தன் பசியைத் தீர்த்துக் கொள் வதற்கு எவ்வளவு வேண்டுமோ, அவ்வளவுதான் கொல் லுமேயல்லாமல், தனக்கு அகப்பட்ட எல்லாப்பிராணிகளை யும் ஒருமிக்கக் கொல்லாது. பசி தீர்ந்தவுடன் சாந்தமா யிருக்கும்.

சிங்கம், பெருந்தன்மை, சாந்தம், தயை முதலான நற்குணங்களையுடையது. ஆதலின், அற்பவல்லமையுள்ளபிரா ணிகளில் ஏதேனும் தன்னை எதிர்த்தாலும், தான் அதை ஒரு பொருட்டாக நினையாது. இன்னும் அது, அதிக நன்றியறிவுள்ள ஜந்து. அது, தனக்குச் செய்த நன்றியை ஒருபோதும் மறவாது. இதற்குத் திருஷ்டாந்தமாய்ப் பல கதைகள் சொல்வார்கள்.

சம்பாஷணைக் கேள்விகள்:—1. சிங்கம் எங்கெங்கே வசிக்கும்? 2. அதன் தேகஅமைப்பு எப்படி? 3. அதற்கு, 'மிருகேந்திரன்' எனப்பெயர் வழங்கக் காரணம்யாது? 4. அது, இரைதேடப்புறப்படுவது எப்பொழுது? 5. சிங்கத்தின் வழக்கம் என்ன? 6. ஆண்சிங்கத்திற்கும் பெண்சிங்கத்திற்கும் வித்தியாச மென்ன? 7. அது, இரையைப் பெறுவதெப்படி? 8. சிங்கம், ஒரு தடவையில் எத்தனைகுட்டிகள் போடும்?

வாசகக்கட்டு:—1. சிங்கத்தைப்பற்றிச் சில வாக்கியங்கள் சொல்வித்தல். 2. சிங்கத்தின் தேக அமைப்பு முதலியவற்றைத் தலைப்பெயராக்கொண்டு, விவரமாய் ஒவ்வொன்றையும் எழுதச் சொல்லல்.

கிண்டர்கார்டன் அப்பியாசம்:—1. சிங்கத்தின் உருவத்தையும், அதன் முகத்தையும், பாதத்தையும் தனித்தனி கற்பலகையில் எழுதுதல். 2. சிங்கம் போலக் கடி

தத்தைக் கத்தரித்தலும், கடிதத்தில் ஊசியால் குத்து தலும்.

11. சிங்கமும், மூன்று எருதுகளும்.

முன்னொரு காலத்தில், கிழத்தனத்தினால் சக்தியற்ற சிங்கமொன்றிருந்தது. அது, காட்டிலுள்ள மிருகங்களைப் பற்றித்தின்பதற்கு வேண்டிய வலிமையற்றிருந்ததால், நாட்டிலுள்ள ஆடுமாடுகளையே பற்றித்தின்று ஜீவித்துவந்தது. அப்போது, அங்கோர் புலத்தில், மூன்று எருதுகள் ஒன்று கூடியே தினந்தோறும் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றைக்கொல்ல அந்தச் சிங்கம் தன்னால் ஆனமட்டும் முயன்று வந்தது. ஆனால், அவ்வெருதுகள் சிங்கத்தை அணுகவொட்டாதபடி, தம் கொம்புகளை நீட்டி

அதனைக் குத்தச் சித்தமாயிருந்தன. ஆதலால், அச் சிங்கம், அவற்றை அணுகவும் சக்தியற்றிருந்தது.

இப்படியிருக்க, ஒருநாள், அவ்வெருதுகள் தம்முள் கலகங்கொண்டு தனித்தனிப் பிரிந்து வெவ்வேறு வயலில் மேய்ந்துகொண்டிருந்தன. அப்போது, அதுகண்ட அச் சிங்கம், முதலில் ஒருஎருதை யணுகி அதன்மேற்பாய்ந்து அதனைக் கொன்றுதின்றது. பின்பு, அவ்வாறே இன்னொன்றையும், அப்பால், வேறொன்றையும் தனித்தனி பாய்ந்து கொன்று தின்றது.

இங்ஙனம், அவை, தம்முள் ஒன்றோடொன்று சண்டைசெய்தமையாலன்றோ சிங்கத்திற்கு இரையாயின! ஆதலால், பிள்ளைகளே! நாம், நமக்குள் கலகப்படாமல், ஒற்றுமையாய் வாழவேண்டும்

சம்பாஷணைக் கேள்விகள்:—1. சிங்கம் எந்த நிலைமையில் இருந்தது? 2. அது எங்கிருந்தது? 3. என்ன செய்தது?4. எருதுகள் முதலில் என்னசெய்தன? 5. அப்பால் அவை செய்தது யாது? 6. அதனால் அவை அடைந்த தீங்கு யாது? 7. இக் கதையின் நீதி யாது?

வாசகக்கட்டு:—1. இக் கதையைச் சுருக்கமாய்ச் சொல்லும்படி கேட்டல். கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைக்க: 2. ஒருகாலத்தில்—சக்தியற்ற—இருந்தது. 3. அது—மிருகங்களை—வேண்டிய—அற்றிருந்தது. 4. ஆனால்—சிங்கத்தை—தம்கொம்புகளை—அதனைக்குத்த—இருந்தன. 5. ஆதலால், அச்சிங்கம்—அணுகவும்—.6. இங்ஙனம், அவ்வெருதுகள்—ஒன்றோடொன்று— செய்தமையாலன்றோ—இரையாயின!

கிண்டர்கார்டன் அப்பியாசம்:—1. இங்குக்காட்டிய படம் போலக் கற்பலகையில் எழுதுதல். 2. சிங்கம்போல



வும், எருது போலவும் தனித்தனி எழுதுதல்.

12. சிலந்திகள்



சிலந்திகளில், நூற்றுக் கணக்கான வகைகளுண்டு. அவற்றில் சில, நம்வீட்டிலும் தோட்டத்திலும் காணப்படுகின்ற சாதாரணச் சிலந்திகள் போலச் சிறியவையாயும், வேறுசில, உடல் இரண்டங்குலம் பரிமாணமுள்ளவையாய், கால்கள் ஏழு, அல்லது எட்டங்குலம் நீளமுள்ளவையாயுமிருக்கின்றன.

சில சிலந்திகள், வீடுகளிற் கூடுகட்டி அவற்றைப் பாழாக்குகின்றன. இன்னுஞ்சில, வயல்களில் வசிக்கின்றன. வேறு சில, தண்ணீரில், தம்மீது ஜலம் படாவண்ணம், தம்மைச்சுற்றி வலை பின்னிக்கொண்டு அங்கு வசிக்கின்றன. மற்றுஞ்சில, பூமிக்குள் வளைகளில் வசிக்கின்றன.

சிலந்தியின் தேகத்தின் பின்பாகம், வட்டமான ஒரு சிறிய பைபோற் காணப்பட்டு, முன் பாகத்தைக் காட்டிலும் மிகவும் பெரியதாயிருக்கும். இன்னும், அம் முன் பாகத்திலிருந்து, பக்கத்துக்கு நான்கு கால்கள் வீதமாக, இருபக்கத்திலும் எட்டுக்கால்கள் தோன்றியுள்ளன. தலையில், அரம்போற் கூர்மையுள்ள இரண்டு உறுப்புக்களிருக்கின்றன. அவற்றில் ஒவ்வொன்றின் நுனியிலும், சிறிய துவாரமொன்றுண்டு. அதன் வழியாக ஒருவகை விஷம் வெளிப்படும். அவ் விஷம், சிலந்தி இதர பிராணிகளைக் கொல்லும் போது, அந்தப் பிராணிகளின் தேகத்திற் சென்று அவற்றுக்குத் துன்பம் செய்யும்.

ஒருவகைச் சிலந்திகளுக்கு, ஆறுகண்களும், மற்றவைகளுக்கு, எட்டுக் கண்களும் உண்டென்பர். சிலந்திகளுக்குக் காது நன்றாய்க் கேட்கும். ஆனால், அக் காது நமது கண்ணுக்குத் தோன்றுவதில்லை.

சிலந்திகளின் தோல், மற்றைச் சிலபிராணிகளின் தோல்போல உறுதியாயிருக்கும். இனி, சிலந்திகளின் கால்கள் முறிந்து போனால், அவை மீண்டும் வளரும்.

சிலந்திகள் முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும். அவை தாம் இட்டமுட்டைகளை விட்டுவிடாமல், தாம் செல்லுமிடமெல்லாம் தூக்கிக்கொண்டே சென்று, அவற்றை நன்றாய்க் காத்துவரும்.

பிள்ளைகளே! சிலந்திகள், வலைபின்னுவதை நீங்கள் எங்கும் கண்டிருப்பீர்களன்றோ! அவ்வாறு அவை பின்னும் வலையில் வந்து அகப்படும் சிறு பூச்சிகளையே அவை உணவாகக்கொள்ளும். சிலந்திகளின் தேகத்தில், பிசின் சம்பந்தமானபண்டம் நிறைந்த சிறிய பைகள் பலவுள்ளன. அப்பண்டம், அவற்றின் தேகத்தின் பின்பாகத்திலுள்ள மிகச்சிறு துவாரங்களின் வழியாய் வெளிவந்து, அவை, ஆகாயத்தோடு சம்பந்தப்பட்டவுடன் இறுகி, நேர்த்தியான நூல்களாக மாறும்.

இப்படி அவற்றின் உடலிலிருந்து வெளிவரும் நூல்களிற் பற்பல சேர்ந்தாலும், நம்தலையிலுள்ள ஒரு மயிரவ்வளவு பருமனுமிராது. இனி, வேறுவகைச் சிலந்திகள், சிறு பக்ஷிகளையும் பிடிக்கத்தக்க உறுதியான நூலையும் பின்னுமாம். இந்நூலால், அவை, ஆதாரமுள்ள இடங்களில் வலைபின்னி, அதன் மத்தியில் தாமிருந்துகொண்டு, அங்கு, சிறிய ஈக்களின் வரவை எதிர்பார்த்திருக்கும். அவ்வாறு ஏதாவதொன்று வந்ததும், தாம் அங்குச் சென்று, முற்கூறிய தலையுறுப்புக்களால் அதைக்குத்திக் கொல்லும்.

பிள்ளைகளே! சிலந்தியை நாம் தொட்டால், அது உடனே ஓடாமல், கால்களையெல்லாம் உடலில் சுருக்கிக்

கொண்டு அங்கேயே அசைவற்று நிற்கும்; ஊசிகொண்டு குத்தினாலும் அசையாது. அப்பால், சிறிது நேரம் முன்போலத் தன்கால்களை வெளி நீட்டி, நாம் ஒன்றும் செய்யாதிருந்தால், பிறகு, தானே அப்பால் செல்லும்.

சம்பாஷணைக் கேள்விகள்:—1. சிலந்தியில் எத்தனைவகை? 2. அவற்றின் தன்மை யென்ன? 3. சிலந்தியின் தேக அமைப்பு எப்படி? 4. சிலந்திக்கு இரையாது? 5. அது, அவ்வுணவைப் பெறுவது எப்படி? 6. சிலந்தி வலை பின்னுவதெப்படி? 7. சிலந்தியின் தலையுறுப்பின் உபயோக மென்ன?



வாசகக்கட்டு:—1. சிலந்தியைப் பற்றிச் சில வாக்கியங்கள் சொல்லும்படி கேட்டல். 2. சிலந்தி வலையைப் பற்றிச் சிற்சில வாக்கியங்கள் எழுதும்படி கேட்டல்.

கிண்டர்கார்டன் அப்பியாசம்:—1. சிலந்தியின் உருவம் போலக் கற்பலகையில் எழுதுதல் 2. சிலந்தியின்வலை போலக் கற்பலகையில் எழுதுதல்.

13. இராஜபுத்திரன், ஈ, சிலந்தி.



பலவருடங்களுக்குமுன், காச்மீரதேசத்திலிருந்த ஓர் அரசகுமாரனுக்கு, ஈ, சிலந்தி ஆகிய இவற்றின் உபயோகம் தெரியாதிருந்தது. ஆதலால், அவன், "கடவுள் ஏன் இந்தப் பிராணிகளைப் படைத்தார்? எனக்குச் சக்தி இருந்தால், இவற்றையெல்லாம் ஒரு நிமிஷத்தில் நாசமாக்கிவிடுவேன்!" என்று சொன்னான். இப்படி இருக்க,

சிலநாள் சென்றபின் அவன், தன்னுடைய பகைவரோடு சண்டைசெய்ய நேர்ந்தது. அப்போது அவன், அவர்களுக்குப் பயந்து, ஒரு காட்டில் ஓடி, அங்குமிங்கும் அலைந்து திரிந்து, ஓர் ஆலமரத்தின் கீழ்ப் படுத்துத் தூங்கி விட்டான்.

அப்போது, பகைவரைச் சேர்ந்த ஒரு யுத்தவீரன் சத்தம் செய்யாமல், மெல்ல அந்த இராஜ குமாரனுடைய அருகே வந்து, அவனைக் கொல்ல யத்தனிக்கையில், ஒரு ஈயானது, அந்த இராஜகுமாரனுடைய உதட்டைச் சுறீரென்று கடித்து, அவனை எழுப்பிவிட்டது.

உடனே அவன் கண்ணைத் திறந்துபார்க்க, அருகில் தன் சத்துருவின் யுத்தவீரன் ஒருவன், கையில் கத்திவைத்துக்கொண்டு, தன்னைக்கொல்ல நிற்பதுகண்டு, சரேல் என்று எழுந்து அவன் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கிக் கொண்டு, அவனையும் துரத்தித் துரத்தி அடித்தான். ஆனால் அவன், இராஜகுமாரன் கையில் அகப்படாமல் ஓடிப்போய்விட்டான்.

அன்று இரவில், அந்தக் குமாரன், அக்காட்டிலேயே ஒரு மலைக் குகையிற்படுத்து நித்திரை செய்தான். அங்கு ஒரு சிலந்தி, வலை கட்டியது. மறுநாள் காலையில் பகைவனுடைய யுத்தவீரர்கள், அவனைத் தேடிக்கொண்டு அக்காட்டின்வழியே வந்தார்கள். அப்படி வந்தவர்கள் தற்செயலாய் இராஜகுமாரன் இருந்த குகைவழியே செல்ல நேர்ந்தது.

அப்போது, அவ்வீரர்களுள் ஒருவன், "இராஜபுத்திரன் இக்குகையில் தான் இருக்கவேண்டும்!" என்றுசொன்னான். மற்றொருவன், "இல்லை! இதில் அவன் ஒளித்திருக்கமாட்டான்! ஏனென்றால், அவன் இதனுள் சென்றிருப்பானாயின், இதோ. வழியில் உள்ள இந்தச் சிலந்தி வலை

அறுபட்டிருக்கவேண்டும்! வலை அறுபடாமல் அப்படியே இருப்பதால், அவன் இதனுள் சென்றிருக்கமாட்டான்!'' என்றனன். இப்படிப்பேசிக்கொண்டே அவர்கள் அந்தக் குகையைக்கடந்து சென்றபின், அந்த இராஜகுமாரன் ஆகாயத்தைப் பார்த்து, "கடவுள் ஈயினாலும் சிலந்தியினாலும் என் உயிரைக் காப்பாற்றினார்!'' என்று சொல்லி அவரை வணங்கினான்.

அப்படி அவன், யாதொன்றுக்கும் உபயோகமில்லை, என்று நினைத்திருந்த ஈயினாலும், சிலந்தியினாலும் உயிர் தப்பினபடியால், 'உலகத்திலுள்ள எல்லாப்பொருள்களையும், ஏதாவது ஒரு உபயோகத்தின் பொருட்டே கடவுள் படைத்திருக்கின்றார்!' என்று தெரிந்துகொண்டான்.

சம்பாஷணைக் கேள்விகள் :—1. ராஜபுத்திரன் எங்கிருந்தான்? 2. அவன் முதலில் கருதியது யாது? 3. அப்பால் அக் குமாரன் எங்குச் சென்றான்?ஏன்? 4. அங்கு நடந்தது யாது? 5. அப்பால் அவன் எங்குப்போனான்? 6. அங்கு நடந்தது யாது? 7. இக்கதையின் நீதி யாது?

வாசகக்கட்டு :—1. இக்கதையைச் சுருக்கமாய்ச் சொல்லும்படி கேட்டல். கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைக்க. 2. "கடவுள்—ஏன்—?" 3. ஒரு நிமிஷத்தில்—விடுவேன். 4. ஒரு—குகையில்—படுத்து—செய்தான்.

கிண்டர்கார்டன் அப்பியாசம்;—1. மலை போலவும், காடு போலவும் எழுதுதல். 2. ஈ போலவும் மனிதன் படுத்திருப்பதுபோலவும் எழுதுதல். 3. ஆலமாத்

தின் கீழ் மனிதன் படுத்திருத்தல் போலவும், அவன் உதட்டில், ஈ. கடிக்கவருதல் போலவும் எழுதுதல்.

14. இராஜபுத்திரன், ஈ, சிலந்தி: பாட்டு:

[பத்யஸ்வரம்.]

ராகம்—ஆனந்த பைரவி. தாளம்—ஏகதாளம்.

பபபாப பாபாம—கமப மா கரிகா
கமபாம கமகாரி ஸாகரீரீ.

ரிரி காக மமபாப—மகமமா கரிஸ நீ
கமபபா கமகரீ ஸிநிஸஸாஸா.

[ஸாஸஸா ஸஸஸாஸ ரிகம பாபா
தாபமா கரிகாப மாகரீஸா.]

1. உலகத்தி லுண்டான பொருள்கள்யா வற்றிலும்
உபயோக மல்லாத தொன்று மில்லை !
பலமாக விதனை நீர் படிக்கவிக் கதையினைப்
பண்புறப் பாடலால் பரிந்து சொல்வோம் :

2. பன்னாளின் முன்னரோர் அரசிளங் குமரன்காச்—
மீரமாம் பதியினில் வசித்து வந்தான்
அன்னவன், "சிலந்தி, ஈ" என்னுமவ் வுயிர்களின்
தன்மை யெந்நாளுமே அறிந்திலாதான்

3. ஆதலால் அவனவை பயனிலா தனவெனப்
பலரிடம் பலவிதம் பகர்ந்து வந்தான்.
ஒதுவோ மிதனையிங் குற்றுநீர் கேளுமின்
உங்களுக் குண்மையே நன்கு தோன்றும் !

4. இப்படிச் சிலபகல் சென்றபின் அன்னவன்
எதிரிகள் தம்முடன் போரியற்றித்
தப்பியே யோடியோர் காட்டினில் தனிமையாய்த்
தங்கியங் கிங்குமாய்த் திரிந்து வந்தான்.

5. அப்புறம் அங்குப்பே ராலமா மரத்தின் கீழ்
அன்னவன் அயர்ந்து தான் கண் வளர்ந்தான்.

செப்புமப் பகைவனங் கவனையோர் வாளோடும்
சேர்ந்துதான் கோல்லவே துணிந்து நிற்க

6. சிறிய ஈ ஒன்றுதான் சிறியவக் குமரனை
உதட்டினில் கடிக்கவும் விழித்தெழுந்து
பெரியவப் பகைவன்கை வாளினைப் பற்றியே
போரினில் அவனையும் வென்ற பின்பு

7. மலையி னோர் குகையினில் மனிதரே யறியாத
வண்ணமாய் இரவிற் போய்ப் படுத்திருந்தான்
வலைபின்னு மியல்புள்ள சிலந்தியவ் வழியிலே
அவன் சென்ற பிறகன்று வலைகள் பின்ன

8. அவ்வழிச் சென்ற வப் பகைவரவ் வலையினுல்
அரசனங் கிலையெனப் பகர்ந்து சென்ருர்.
அவ்விடம் செல்லினவ் வரசனப் பகைவரால்
அடிபட்டி றப்பதற் கைய முண்டோ!

9. ஆதலால், அன்னவன், ஆதியந் தமிலாக்
கடவுளை அன்புடன் வணங்கி நின்ருன்.
ஆகவே, அவனந்த பிராணி தம்மை
அறிந்தனன் உபயோக மாகவே தான்.
தீதிலா துலகினில் தோன்றும் பொருளில்
யாதுமே யுபயோக மானதே யாம்!

---

15. வாத்துக்கள்.



இவை, நிலத்திலும், நீரிலும் வாழும் பிராணிகள். என்றாலும், விசேஷமாய் நீரிலேயேவாழும் இயல்புடையன. ஆதலின் இவற்றை, 'நீர்ப்பறவை' என்பார்கள். இவ்வினத்தைச் சேர்ந்தவை யாவும், நீரில் நன்றாய் நீந்தும் இயற்கையுடையனவாம். கோழியினத்தைச் சேர்ந்தவைகளோ என்றால், அவை பூமியைக் கிளறுமியல்புடையன.

இனி, இவ் வாத்தினத்தைச் சேர்ந்தவை, தரையில் நடக்கும்போது விகாரமாய் நடக்கும். இன்னும், இவற்றில் சில உயரப்பறக்கவும் சக்தியுடையன.

வாத்துக்களில் இரண்டுவகையுண்டு: அவை, குள்ள வாத்து, பெருவாத்து என்பனவாம். வாத்துக்களின் தேக அமைப்பு, படவுபோல அடிப்பாகம் குவிந்தும், நடுப்பாகம் பருத்தும், மேற்பாகம் சற்றுக் குவிந்தும் நீண்டும், சிறகுகள் நிறைந்துமிருக்கும். குள்ளவாத்தின் இறகுகள், பல வர்ணமுடையனவாய்ப் பார்வைக்கு வெகு அழகாயிருக்கும். அவற்றின் கழுத்தில், வெண்மை நிறமுடைய கழுத்துப் பட்டைபோல, சுற்றிலும் வெண்மையான மயிர்களி

170587.

ருக்கும். இனி, வாத்துக்களின் கழுத்து நீண்டும், இறகுகள் அகன்றும், கால்கள் குறுகியும், மூக்குத் தட்டையாயுமிருக்கும். ஆனால், குள்ளவாத்தின் மூக்குத் தட்டையாயிருப்பதோடு, கரண்டிபோலச் சற்றுநீண்டுமிருக்கும். பெருவாத்துக்களின் இறகுகள், சில சுத்தவெண்மையாயும், வேறுசில, பசுமை கலந்த வெண்மையாயு மிருக்கும். வாத்துக்களின் வால் குட்டையாய் இருபுறத்திலும் எண்ணெய்க் கசிவுள்ள ஒருவகைப் பதார்த்தமுண்டு. அதனை வாத்துக்கள், தம்மூக்கினாலெடுத்துச் சிறகுகளில் தடவிக் கொள்ளுகின்றன. ஆனதுபற்றியே, வாத்துக்கள், நீரில் முழுகி வெளிவந்தால், அவற்றின் சிறகுகளில் நீர் தங்குவதில்லை.



TB
O31,6(3)
1N12

வாத்துக்களின் கண்கள் மிகக் கூர்மையாயும், பளபளப்புள்ளன வாயுமிருக்கும். காதுகளோ வென்றால், அவை மிகச் சிறியவையாயும்சிறகுகளால் மூடப்பட்டு மிருப்பதால் அவை நம் கண்களுக்குப் புலப்படுவதில்லை. வாத்துக்களின் பாதங்கள் ஒவ்வொன்றிலும் நான்கு விரல்களிருக்கின்றன. அவற்றில், முன்பக்கத்துள்ள மூன்றும் வலைபோன்ற தடித்ததோலால் இணைக்கப்பட்டுள்ளன. பின்புறத்துள்ள ஒன்று சிறியதாயிருப்பதால், நடக்கும்போது பூமியிற் பதிவதில்லை. வாத்துக்களின் கால்கள், மேற்கூறிய

வாறு அமைக்கப் பட்டிருத்தலால், அவை, தண்ணீரில் நீந்துவதற்கு அநுகூலமாயிருக்கின்றன.

இனி, வாத்துக்கள், சிறு விதைகள், புழுக்கள், நத்தைகள், இன்னும் வேறு சில சிறிய பிராணிகள் ஆகிய இவற்றைத் தின்னும். இதற்காகஅவை, வயல்களிலும், மற்றைச் சிறியகுட்டை முதலியவைகளிலும் தம்மூக்கால் சேற்றைக் கிளறி அதிலுள்ள புழுக்களைத்தின்னும். என்றால், அவை அதிக ஆழமான நீரில்நன்றாய்மூழ்கா என அறியவேண்டும். குள்ளவாத்துக்கள் ஆழமான நீரில் நன்றாய் மூழ்குமாதலால், அவை, பெரிய குளம் முதலியவிடங்களிலுள்ள சிறிய பிராணிகளை மேற்கூறியவாறு எடுத்துத்தின்னும்.

வாத்துக்கள், தரையில் கூடுகட்டி, அதில் முட்டையிடும். முட்டைகள், கோழிமுட்டைகளைக் காட்டிலும் பெரியவையாயிருக்கும். ஒரு தடவையில் பல முட்டைகளிடும். அங்ஙனம் எல்லா முட்டைகளையும் இட்டபிறகே, அவற்றை அடைகாக்கும்.

வாத்துக்களும், அவற்றின் முட்டைகளும் மனிதர்களுக்கு உணவாகின்றன. இதற்காக, சிலர் அவற்றை வீட்டில் வைத்து வளக்கின்றார்கள். வாத்துக்களின் சிறிய இறகுகள், பஞ்சுபோலப் படுக்கைக்கும், பெரிய இறகுகள் எழுதுவதற்கும் உபயோகமாகும்.

சம்பாஷணைக் கேள்விகள் :—1. வாத்துக்கள் எங்கேவசிக்கும்? 2. அவற்றின் வழக்கங்களென்ன? 3 அவற்றின் வகை எத்தனை? அவை யாவை? 4. அவற்றின் வித்தியாசமென்ன? 5. வாத்துக்களின் வாலிலுள்ள பொருள்யாது? 6. அதனால், அவற்றிற்கு உபயோகமென்ன? 7. வாத்துக்களின் உபயோகம் யாது?

வாசகக்கட்டு:—1. வாத்துக்களின் தேக அமைப்பு முதலிய வற்றைத்தலைப்பெயராக்கொண்டு, ஒவ்வொன்றையும் தனித்தனி விவரமாய் எழுதும்படி கேட்டல். 2. வாத்துக்களைப்பற்றிச் சிற்சில வாக்கியங்கள் சொல்லச்சொல்லல். கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைக்க: 3. வாத்து நீர்ப்பறவை—. 4. இவ்வினத்தைச்சேர்ந்தவை—நடக்கும்போது—நடக்கும். 5. குள்ளவாத்தின் கழுத்தில்—கழுத்துப் பட்டைபோல—வெண்மையான—இருக்கும். 6. வாத்துக்களின்கண்கள்—உள்ளனவாயும், —உள்ளனவாயும்—.

கிண்டர்கார்டன் அப்பியாசம் :—1. இங்குக் காட்டியபடம் போலவும், வாத்தின் கழுத்துப் போலவும், கால்போ

லவும் கற்பலகையில் எழுதுதல். 2. வாத்தைப் போலக் கடிதத்தைக் கத்தரித்தல். 3. வாத்தைப் போல விதைவைத்தல்.

16. பேராசையுடையவன் பெருந்துன்பம் அடைவன்

முன்னொரு காலத்தில், வேளாளனொருவன் இருந்தான். அவனிடத்தில் பற்பல வாத்துக்களிருந்தன. அவற்றிலொன்று, நாள்தோறும் பொன்மயமான ஒவ்வொரு முட்டையிட்டுவந்தது. அதனால், அவ்வேளாளன் சீவனம் செய்துவந்தான். ஆனால், அம்முட்டை அவன் தினம் சீவனம் செய்வதற்கு மாத்திரம் போந்திருந்ததேயல்லாமல், அவன் சீமானாய் விசேஷவர்த்தகம் முதலான வற்றைச்செய்யவும், விசேஷ சவுக்கியமடையவும் போதுமானதாயில்லை. ஆதலால், அவன் அடியில் வருமாறு ஆலோசிப்பானாயினன்:—

"நமக்குத்தினந்தோறும் கிடைக்கும் ஒவ்வொருமுட்டையும், அப்போதப்போது சீவனத்துக்குமாத்திரம் போ

துடமானதாயிருக்கின்றது! நம் அயலகத்தார் சிறந்த மாட மாளிகைகளோடும், ஆடையாபரணங்களோடும் இன்பமாய் வாழ்கின்றார்களே! நாம் அவர்கள் போலாவது எப்போது!

இவ்வாத்து, தினம் ஒன்றுவீதம் பொன்மயமான முட்டை இடுவதால், இதன் வயிற்றில் நிரம்பப் பொன்முட்டைகள் இருக்கவேண்டும் ஆதலால், இதனைக்கிழித்து அம்முட்டைகள்யாவற்றையும் ஒரே காலத்தில் நாம் பெறுவோமானால், நம்முடைய வறுமை நீங்க, அயலகத்தார் போலவே, நாமும் சீமானாய்ச் சுகமுறலாம். ஆகவே, நாம் அப்படியே, இதைக்கிழித்துவிட வேண்டும்," எனத் தீர்மானித்துக் கொண்டான்.

உடனே அப்பேராசைப் பேதை, தான் எண்ணிய வாறே அவ்வாத்தைக் கிழித்துப்பார்க்க, அதன் வயிற்றில் அன்று இடவேண்டிய முட்டையொன்று மாத்திரமிருந்ததேயன்றி, அவன் எண்ணியபடி பல முட்டைகளில்லை.

ஆகவே, அவன் மிகத் துயரங்கொண்டு, ஐயோ! தினம் ஒவ்வொன்றுகிடைத்துவந்ததே! இனி அதுவும்போயிற்றே! என் பேராசையின் பலன் இப்படியன்றோ ஆயிற்று! இனி யான் செய்வது யாது!! என எண்ணி எண்ணி வருந்தினன்.

ஆதலால், பிள்ளைகளே! யாரும், கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைய வேண்டும். அப்படியல்லாமல், பேராசையால் தகுதியற்றகாரியம் செய்யின், பெருந்துன்பமடைவார்கள். எனவே, உள்ளதைக் கொண்டு திருப்தியடைதலே உத்தமம்.

சம்பாஷணைக் கேள்விகள் :—1. வேளாளனுக்குத் தினந்தோறும் கிடைத்துவந்தது யாது? 2. அதனுல் அவனுடைய நிலைமை எப்படியிருந்தது? 3. அப்பால் அவன் எண்ணியது யாது? 4. அவன் பின்பு செய்தது என்ன? 5. அதனுல் அவன் அடைந்த நிலைமை யாது? 6. இக்கதையின் நீதி யாது?

வாசகக்கட்டு:—1. இக்கதையைச் சுருக்கமாய்ச் சொல்லும்படி செய்தல். 2. இதன் நீதியை விவரிக்கும்படி சொல்லல். கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைக்க: 3. யாரும்—கொண்டு—அடைய வேண்டும். 4. யாரும் தகுதியற்ற — செய்யின்— அடைவர்.

கிண்டர்கார்டன் அப்பியாசம்:—1. வேளாளன் விசனத்துடன் உட்கார்ந்து கொண்டிருப்பது போலவும், வாத்துமுட்டை போலவும் எழுதுதல். 2. வீடுபோல



வும், வாத்துக் கீழேகிடப்பதுபோலவும், கத்திபோலவும் தனித்தனி எழுதுதல்.

17. மண்ணின் வகைகள்.

பிள்ளைகளே! நமது தேசத்தின் பூசாரம் எல்லாவிடத்திலும் ஒரேமாதிரியாயிருப்பதில்லை என்பதை நீங்கள் கேட்டிருக்கலாம்! அவை, ஜில்லாக்கள் தோறும், நிறத்திலும், குணத்திலும் மாறுபட்டிருக்கின்றன. என்றால், சில இடங்களில், கருமையாயும், வேறு சில இடங்களில் செம்மையாயும், இன்னுஞ் சில இடங்களில் ஒரு வாறு

வெண்மையாயு மிருக்கும். இவற்றை அடியில் வருமாறு வகுப்பார்கள்: அவை, கரிசல், செவ்வல், அடைமண்ணிலம், சுக்கான், மணற்பாங்கு, சதுப்பு நிலம், களர் நிலம் என்பனவாம்.

இவற்றில் கரிசல் நிலம், கருமை நிறமுடையதாய், பருத்திப்பயிர் செய்வதற்கு ஏற்றதாயிருக்கின்றது. இவ்வகை நிலத்தை, கிருஷ்ணு, கோதாவரி, மதுரை ஜில்லாக்களின் சிற்சில இடங்களிலும், பல்லாரி, அனந்தபூர், கடப்பை, கர்னூல், திருநெல்வேலிமுதலிய ஜில்லாக்களின் பெரும்பாலான பாகங்களிலும் காணலாம்.

செவ்வல் நிலம், செம்மை நிறமுடையதாய், துவரை, உழுந்து, பயறு, தினை, சாமை முதலிய புன்செய்த்தானியங்கள் விளைவதற்கு ஏற்றதாயிருக்கின்றது. இன்னும் இவ்வகை நிலத்தில் நீர்வளமிருந்தால் நெல்லும் பயிர் செய்யலாம். இத்தகைய நிலத்தை, கடப்பை, கர்னூல், பல்லாரி, மதுரை, திருச்சிராப்பள்ளி என்ற ஜில்லாக்களின் சிறுபான்மையான பாகங்களிற் காணலாம். இனி, இந்நிலம், இவ்வகை சிவந்திருக்கக் காரணம் யாதெனில், அது, இரும்பு சம்பந்தமுடையதாயிருத்தலேயாம் என்பர்.

அடைமண் நிலமாவது, நதி, கால்வாய் முதலியவற்றிலிருந்து வண்டலும், எக்கலும் படிந்துள்ள நிலமாம். இது, நதிதீரங்களில் விசேஷம். இன்னுமிது, விசேஷ செழுமைவாய்ந்தது. இவ்வகைநிலத்தில், எவ்வகைப்பயிருக்கும் வேண்டிய பலவகை ஊட்டமும் நிரம்பி உள்ளனவாம். ஆதலால், இதில், எல்லாத் தானியங்களும் நன்றாய்ச் செழித்து வளரும். இம்மண்ணில், 'கரிசல் அடைமண்' எனவும், 'மணல்அடைமண்' எனவும் இருவகையுண்டு. கரிசல் அடைமண், ஆறுகள் உற்பத்திப்பாகத்திற் கருகி

லும், நதிப் பிரிவுகளின் மத்திய பிரதேசங்களிலும் விசேஷம்.

சுக்கான் என்றது மேற்கூறிய ஜில்லாக்களிலுள்ளகரிசல் மண்ணோடுகலந்துள்ளது. இதுவும், வளமுள்ள பூமியேயாம். இனி, மணற்பாங்கோ என்றால், அது, சமுத்திரக்கரையடுத்த பிரதேசத்தில் விசேஷம். அங்கு, சவுக்கு, தென்னை முதலிய பயிர் செய்யலாம்.

சதுப்புநிலமாவது, ஈரமாயும், பள்ளமாயுமுள்ள பூமியாம். இதில், கோரைமுதலியவை பயிராகும். இவ்வகை நிலம் மலைப் பிரதேசத்தில் அதிகம்; சம பூமியிலில்லை. எனவே, நீலகிரி ஜில்லாவில் அதிகமென அறியலாம்.

களர்நிலமாவது, உப்புவிளையக்கூடியதும், வேறு நன்செய்ப்பயிரும், புன்செய்ப்பயிரும் சாகுபடி செய்வதற்கு அநுகூல மற்றதுமான பூமியாம். இதைக் கழிக்கரைக்கருகிலும், கடல்கரைக்கருகிலும் காணலாம்.

சம்பாஷணைக் கேள்விகள்:—1. மண்ணின் வகைகள் எத்தனை? 2. என்னென்ன! 3. ஒவ்வொன்றும் எந்த ஜில்லாவிலிருக்கின்றது? 4. அதில் என்னென்ன பயிர் செய்யலாம்.

வாசகக்கட்டு:—1. இப்பாடத்தில் கூறியவிஷயங்களை, பிள்ளைகளின் சொந்த வார்த்தையைக் கொண்டு சொல்விக்க. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைக்க: 2. அடைமண்ணிலமாவது—முதலியுவற்றிவிருந்து—எக்கலும்—நிலமாம். 3. சுக்கான் என்றது—அநேக—ஜில்லாக்களிலுள்ள—கலந்துள்ளது.

கிண்டர்கார்டன் அப்பியாசம்:—கூடுமானால், உபாத்தியாயர், ஒவ்வொருவகை மண்ணையும் பிள்ளைகளுக்கு நேரில் காட்டி விவரித்தல் நலமாம்.

18. முதலை.



முதலை, பார்வைக்கு விநோதமான ஜந்து. இது பல்லியினத்தைச் சேர்ந்தது. இது உருவத்தில்பல்லிபோன்றிருத்தல்காணலாம். ஆனாலுமிது, பல்லியினும் விசேஷ நீளமும், பருமனுமுள்ளது. அதன்மேற்புறம்தடித்தும், காடுமுரடாயுமுள்ள தோலால் முடப்பட்டிருக்கின்றது. என்றால், சிலசமயத்தில், துப்பாக்கியாலும் அத்தோல் தொளையுண்டாக்கப்படாதாம். முதலையின் அலகு நீண்டும், கால் குறுகியும், பற்கள் கூர்மையாயுமிருக்கும். இனி முதலையின் நாக்கு, அதன் வாயின் அடிப் பிரதேசத்தை யொட்டிக்கொண்டிருக்கின்றதென நவீன சாஸ்திரிகள் எழுதியிருக்கின்றார்கள். அதற்கு நாக்கு இல்லை யென முன்னோர் கூறியது பொருத்தமுடைய தன்று.

முதலை, தரையில் ஊரும்போது, பார்வைக்கு மிகவும் விகாரமாயிருக்கும். அது நீரிலிருக்கும்போது, இஷ்டப்படி, மேலே மிதப்பதற்கும், அடியில் மூழ்கிய வண்ணமாயிருப்பதற்கும் சக்தியுடையது.

முதலை, ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா கண்டங்களின் உஷ்ணபாகங்களில் ஓடும் நதிகளில் சஞ்சரிக்கும். மேலும், அது சிற்சில வேளைகளில், நதிக்கரையை யடுத்த பாகத்தில் வந்து குளிர் காய்வது முண்டு. அப்படியிருக்குங் காலத்தில், அதைச்சிலர் மரத்துண்டு எனக்கருதுவதுண்டு. என்றால், திடீரென்று பார்ப்பவர்க்கு அது, மரம் போலவே தோன்றும்.

இன்னும், முதலைகள், ஈஜிப்டு தேசத்திலுள்ள நைல் நதியிலும் விசேஷமாயுள்ளன வெனக் கூறுவார்கள். இனி, வட அமெரிக்காவிலுள்ள 'மிஸ்ஸிஸிப்பி' என்னும் நதியில் ஒருவகை முதலைகள் உண்டு. அவற்றிற்கு, 'அல்லி கேடர்' எனப்பெயர் கூறுவர்.

மேற்கூறிய கண்டங்களில், முதலையுள்ள நதிகளுக்கு அருகிலிருப்பவர்கள் அஜாக்கிரதையாய், அந்நதிகளிலிறங்குவார்களாயின், பிராணிகளின் வரவையே எதிர் பார்த்திருக்கும் அம்முதலைகள், அவர்களைத் தண்ணீர்க்குள் இழுத்துச்செல்லும். முதலையின் வாய்க்கு அகப்பட்ட பிராணிகள், மீண்டும் தப்பிப் பிழைத்தல் அருமை.

இனி, முதலைக்கு அகப்படும் புலி முதலிய எவ்வகைப் பிராணியேயாயினும், அதனை அது, நீரில் சுலபமாய்ப் பற்றி இழுத்துக்கொள்ளும்.

பெண்முதலை ஒருதடவையில் சற்றேறத்தாழ முப்பது முட்டைகளிடும். அவை, மணலிலேயே முட்டையிடும். அம்முட்டைகள் வெயிலின் வெப்பத்தால் தாமே குஞ்சு பொரிக்கும். இப்படிக் குஞ்சு வெளியாக நாற்பதுநாட்கள்

வேண்டும். குஞ்சு வெளியானபோதே ஆறடி நீளமாகின்றன. உடனே அவை, தண்ணீரில் ஓடிப்போம்.

சம்பாஷணைக் கேள்விகள் :—1. முதலையின் உடல் எப்படியிருக்கும்? 2. அது, எவ்வினத்தைச் சேர்ந்தது? 3. முதலை எங்கெங்கேவசிக்கும்? 4. அதன் வழக்கம் என்ன? 5. 'அல்லிகேடர்'. என்பது என்ன? 6. அது எங்கே வசிக்கும்?

வாசகக்கட்டு :—1. முதலையைப்பற்றிச் சிற்சில வாக்கியங்கள் சொல்லும்படி கேட்டல். 2. முதலையின் தேக அமைப்பு முதலியவற்றைத் தலைப்பெயராகக்கொண்டு ஒவ்வொன்றையும் விவரமாய் எழுதுதல்



கிண்டர்கார்டன் அப்பியாசம்.—1: முதலையைப் போல எழுதுதல். 2. அதன் ஒவ்வொரு அவயவத்தையும் தனித்தனி எழுதுதல்.

---

19. புலியும் முதலையும்.

ஒரு காட்டில் திரிந்துகொண்டிருந்த ஒரு புலி, பற்பல ஆடுமாடுகளுக்குத் தீங்கிழைத்துக்கொண்டு வந்தது.

இடையர்கள் அப்புலியைக் கொல்வதற்கு அநேகவித மான உபாயங்களைச்செய்தும், அவையாவும் பயன் படாமற்போயின. முடிவில், புலி தான் காலையில் அடித்துக்கொன்ற பிராணியைக் கொஞ்சம் தின்றுவிட்டு, மற்றதை மாலையில் தின்னவரும், என்ற அதன் இயல்பைத் தெரிந்துகொண்டு, காட்டிலுள்ள சில விஷப்பூண்டுகளின் இரசத்தை, அப்புலி அடித்துக்கொன்றபிராணியின் தேகத்தைக் கீறி உள்ளே செலுத்துவார்கள்; மேல் தோலிலும் தடவுவார்கள்.

அப்பால், மாலையில், மேற்கூறியபடி அந்தப்புலி, தான் முன்னமே கொன்ற பிராணியின் அருகில் வந்து அதைப் புசிக்க ஆரம்பிக்கும். சில நிமிஷங்களுக்குள் அந்த விஷம் அதன் உள்ளேசென்று வருத்தும். அப்போது அப்புலி, அங்கு அருகிலுள்ள நீரோடையிற் சென்று ஆவலுடன் நீரைக் குடிக்கும். ஆயினும், வரவர வெப்பம் அதிகமாக, அது இறந்துவிடும்.

முன் ஒருகாலத்தில், ஆங்கில உத்தியோகஸ்தன் ஒருவன் வேட்டையாடப்போய், நர்மதை கதிக்கரையிலுள்ள ஒரு புதரில் ஒளித்துக்கொண்டிருந்தான். அப்போது, மேற்கூறிபபடி விஷம் உண்டபுலியொன்று, தாகத்தைத் தணித்துக்காள்ளும் பொருட்டு, மிக்க ஆவலுடன் அங்கேவந்து, நர்மதை நதியின் நீரைக் குடித்துக் கரையில் வந்து புரண்டது. மீண்டும் விஷத்தின் வெப்பத்தைப் பொறுக்கமாட்டாமல், அந்நதியில் வீழ்ந்து புரண்டது. கரையில் இருந்த அந்த உத்தியோகஸ்தன் அதன் வருத்தத்தைப்பார்த்துச் சகிக்கமாட்டாதவனுய், தன்னிடம் இருந்த துப்பாக்கியால் அதைச் சரேலென்னு சுட்டுவிட நினைத்து, அதன் அருகிற் போனுன். அச் சமயத்தில் அங்குத்திடீரென்னு ஒருமுதலை வந்து அப்புலியைக் கவ்வியது.

அப்போது அந்தப் புலி, தனக்கு நேர்ந்த துன்பத்தையும் மறந்து முதலையின்மேல் பாய்ந்து அதைத்தன் நகங்களால் கீறத் தொடங்கியது. ஆனால் முதலையின் செதிள்கள் மிக்க உறுதியானவையாதலின், அம்முதலை அதற்குச் சிறிதும் அசையவில்லை. அதனால், புலி தளர்ச்சி அடைந்தது. முதலையோ, விடாமல் உறுதியாய்க் கவ்விக் கொண்டே இருந்தது. அப்போது முதலையின் உடல் நீர் மட்டத்துக்குமேல் தெரிந்தமையால், கரையில் இருந்த உத்தியோகஸ்தன் துப்பாக்கியால் அதைச் சுட்டான். உடனே முதலையும் புலியும் இறந்தன.

சம்பாஷணைக் கேள்விகள்:—1. புலி என்ன செய்து வந்தது? 2. புலியின் இயல்பு யாது? 3. அப்புலிக்கு அங்கு நேர்ந்தது என்ன? 4. முதலை புலியை யாது செய்தது? 5. அப்பால் நடந்தது என்ன?

வாசகக்கட்டு:—1. இக்கதையைச் சுருக்கமாய்ச் சொல்லும்படி கேட்டல் 2. புலியைப்பற்றியும், முதலையைப்பற்றியும் சிற்சில வாக்கியங்கள் சொல்லும்படி கேட்டல்.

20. பருத்தி.

இது, நார்வகைப் பயிரிற் சேர்ந்தது. நமக்குஉபயோகமாகும் பயிர்வகைகளில் ஒன்று. இது, சென்னை இராஜதானியிலுள்ள பல்லாரி, கடப்பை, கர்னூல் திருநெல்வேலி முதலிய பல ஜில்லாக்களிலுள்ள கரிசற் காடுகளிலும், பம்பாய் இராஜதானியில் பற்பல இடங்களிலும், குஜராத்திலும், அதிலுள்ள பீரார் மாகாணத்திலும் விசேஷமாகப் பயிரா

கின்றது. ஆனல் நமது இராஜதானியில், திருநெல்வேலி ஜில்லாப் பருத்தியே, இதர ஜில்லாப்பருத்தியினும் சிலாக்கியமாகக் கொண்டாடப்படுகின்றது.



பருத்தியிற் பலவகையுண்டு. அவை, உப்பம் பருத்தி, போர்பன் பருத்தி, நாடான்பருத்தி, ஈஜிப்டு தேசத்துப் பருத்தி, ஜீலண்டு பருத்தி, பெரூ தேசத்துப்பருத்தி எனப் பலவாம்.

இனி, பருத்தியின் சாகுபடிக்குக் கரிசல் காடே ஏற்றதென்றுமுன் சொல்லப்பட்டதன்றே! அதுவும், சுக்கான் கலந்தகரிசலாயின், இன்னும் சிலாக்கியமேயாம். சில இடங்களில் மணற்பாங்கான செவ்வல் நிலங்களிலும் பருத்திப்பயிர்செய்யப்படுகின்றது.

ஜுன் மாதம் முதல், செப்டம்பர்மாதம் வரையிற் பெய்யும் கோடைமழையைக் கொண்டு, பூமியை நன்ருய் உழுது வைப்பார்கள். அப்பால், விதைவிதைப்பதற்குப் பதினைந்து தினங்களின்முன், ஆட்டுப் புழுக்கை முதலிய எரு இடுவார்கள். இனி, பருத்திக்கு எலும்பு சம்பந்தமான எருவே முக்கிய எருவாதலால், நீரில் கரையக்கூடிய எலும்புத்தூள்களையும், எலும்பின் சத்து அடங்கிய கொட்டைமுத்துப் பிண்ணுக்கையும் முக்கிய எருவாய்ப் போடுவதுண்டு.

செப்டம்பர் மாதமே விதை விதைக்கத்தக்க காலமாம். சில விடங்களில் ஜுலை, ஆகஸ்ட் மாதங்களிலும் விதைப்பதுண்டு. விதைகளில் பஞ்சு ஒட்டிக் கொண்டிருக்குமாதலால், சாணிஜலத்தில் விதைகளைப் போட்டு ஊறவைத்துப் பஞ்சைப்போக்கி, அப்பால் அவற்றைக்காய வைத்து, உழுபடைச்சாலில் விதைக்கவேண்டும். மழை பெய்தவுடன் அவை முளைத்து வளரும். பருத்தி முளை கிளம்பும் பருவத்தில் மழை கொஞ்சமாயும், வளரும் பருவத்தில் மழை அதிகமாயும், பயிர் முதிர்ந்து காய்க்கும் பருவத்தில் மழை இல்லாமலும் இருக்கவேண்டும்.

பருத்தி, சாதாரணமாய் ஆறுமாதப் பயிர். சில பருத்திகள், எப்பொழுதுமே மரமாய் நின்று பலன் கொடுத்து வரும். அவ்வாருன பருத்திக்கு, பிரதிவருஷமும், கிளைகளை வெட்டி உரம்போட்டுவந்தால், பலன்கொடுத்துக் கொண்டேவரும்.

இனி, முன் சொல்லியபடி, செப்டம்பர் மாதத்தில் விதைவிதைத்தால், பிப்ரவரி, அல்லது மார்ச்சு மாதத்தில் பஞ்சு எடுக்கலாம். செடிகளில் காய்கள் வெடித்த உடன், பஞ்சு எடுக்க ஆரம்பிக்கவேண்டும். அப் பஞ்சுகள்

கீழே விழும்வரையில் விட்டுவிடக் கூடாது. செடியிலிரு ந்து, சாதாரணமாய் மூன்று தரம் பஞ்சு எடுக்கப்படும். சிற்சிலவிடங்களில், நாலைந்துதரமும் எடுப்பதுண்டு.

பஞ்சிலிருந்து நூல்வஸ்திரங்கள் நெய்யலாம். கொட் டைகள் மாடுகளுக்கு உணவாகும். இன்னும், கொட்டை யிலிருந்து, அமெரிக்கர்கள், ஒருவகை எண்ணெய் இறக்கு வார்கள். இன்னும் அது, ஸோப்பு செய்யவும், விளக்கெரி க்கவும் உதவும். செடியின்வேர் மருந்துக்கு உபயோக மாகும். கொட்டையின்மேலோடு காகிதம் செய்ய உதவும்.

சம்பாஷணைக் கேள்விகள்:—1. பருத்தி எதிற்சேர்ந்தது? 2. அது எத்தனைவகை? என்னென்ன? 3. பருத்தி எங்கெங்கே உற்பத்தியாகும்? 4. அதைப்பயிர்செய்

வது எப்படி ? 5. பஞ்சை எடுப்பது எப்படி? 6. பருத்தியில், எதெது எதெதற்கு உதவும் ?

வாசகக்கட்டு :—1. பருத்தியைப்பற்றிச் சில வாக்கியங்கள் சொல்லும்படி கேட்டல் 2. பருத்தியைப் பயிர்செய்தல் முதலியவற்றைத் தலைப்பெயராகக் கொண்டு ஒவ்வொன்றையும் விவரமாய் எழுதச்சொல்லல்.

கிண்டர்கார்டன் அப்பியாசம் :—1. பருத்திச் செடியைப் போல எழுதுதல். 2. அதன் காயைப்போல் எழுதுதல்.

---

21. துவாரமுள்ள பதார்த்தங்கள்.

பிள்ளைகளே! மேசையின்மேலாவது, கடிதத்திலாவது வேறெவ்விடத்திலாவது எழுதும் மை கொட்டிவிட்டால் நாம் யாது செய்கின்றோம் ? 'ப்ளாடிங் பேபர்' என்னும் மையொற்றுங் காகிதத்தினுல் அதை ஒற்றுகின்றோமல்லவா ! அதனுல் உண்டாவதென்ன ! சற்றுக் கவனித்துப் பார்ப்போம். அப்போது, அந்தமையை அக்கடிதம் ஆகர்ஷிக்கின்றது. அதற்குக் காரணம் யாதெனில், மையொற்றுங் கடிதம் சிறிய துவாரங்களுடைமையேயாம்.

இப்படியே, சீமைச் சுண்ணும்பும் துவாரமுள்ளதேயாம். அதை, தண்ணீரில் வைத்துப்பார்த்தால் இவ்வுண்மை நன்கு வெளியாகும். இன்னும், செங்கல், ஸ்பஞ்சு என்பவைவும், துவாரமுள்ளனவேயாம்.

இனி, ஒரு பாத்திரத்தில் கெரஸின் எண்ணெயை ஊற்றி அதில் ஒரு வர்த்தியையுமிட்டு, அவ்வர்த்தியின்

நுனியில் தீயைப்பற்றவைத்தால் எண்ணெயிருக்கும் வரையில் அது எரிகின்றதன்றோ! அதற்குத் காரணம் யாது?



வர்த்தியா யெரிகின்றது? இல்லையன்றோ! ஏனென்றால், எண்ணெய்சம்பந்தமில்லாத வர்த்தி, எண்ணெய் சம்பந்தமுள்ள வர்த்திபோல் எரியாதல்லவா! ஆதலால், அவ்வெண்ணெயை அந்தவர்த்தியானது, தன்னிடமுள்ள துவாரங்களின் மூலமாய் ஆகர்ஷிக்கின்றதென அறியவேண்டும்.

இனி, வர்த்தியில் துவாரங்களுண்டு என்பதை, அடியிற்காட்டும் திருஷ்டாந்தத்தால் அறியலாம்: அதாவது, ஒருவர்த்தியை முதலில் தண்ணீரில் நனைத்து, அதன் ஒருமுனையை, தண்ணீருள்ள ஒருபாத்திரத்தில் இட்டு, மற்றொருநுனியை, தண்ணீரில்லாத வேறொரு பாத்திரத்தில் இட்டால், சிறிது நேரத்தில், தண்ணீருள்ள பாத்திரத்திலிருக்கும் ஜலமானது, அவ்வர்த்தியிலுள்ள துவாரங்களின் மூலமாய், மேல்நோக்கிச் சென்று, தண்ணீரில்லாத பாத்திரத்தில் சிறிது சிறிதாய் வந்து விழுவதைக் காணலாம்.

இன்னும், கெரஸின் எண்ணெயை ஊற்றி, அதில், ஒருபிரம்பை நிறுத்தி, அதன் மேற் பாகத்தைக்கொளுத்

திஞல், உடனே அப்பிரம்பின் நுனி,வர்த்திபோல எரியும். இதஞல், பிரம்பும், வர்த்திபோல, துவாரங்களுடையதென அறியவேண்டும். இனி, மெழுகுவர்த்தி எரிதலுக்கும் இதுவே காரணமாம்.

சம்பாஷணைக் கேள்விகள்:—1. துவாரமுள்ளவை எவை? 2. வர்த்திகள் எண்ணெயைக் கிரகிக்கக்காரணம் யாது? 3. மை யொற்றுங் கடிதங்களின் தன்மை யாது? 4. வர்த்தியில் துவாரங்களுண்டு என்பதை எவ்வெக் காரணங்களால் அறியலாம்?

வாசகக்கட்டு :—1. மையொற்றுங் கடிதம், வர்த்தி ஆகிய இவற்றின் தன்மையைப் பற்றிச் சிற்சில வாக்கியங்கள் சொல்லும்படி கேட்டல். 2 பிரம்பின் தன்மையை விவரிக்கும்படி கேட்டல்.

கிண்டர்கார்டன் அப்பியாசம் :—விளக்குப் போலவும், வார்த்திபோலவும், க்ளாஸ் போலவும் எழுதுதல்.

22. வடிகட்டல்.

சிறுவர்காள்! காப்பிக்கஷாயம் முதலியவற்றை வடி கட்டவேண்டுமானல், நாம் என்னசெய்கிறோம்? ஒருபாத்



திரத்தில், இலேசானஒரு துணியைவிரித்து, அத் துணியில் கஷாயத்தை ஊற்றுகின்றேமல்லவா! அப்போது, அத்துணி யிலுள்ள சிறு துவாரங்களின் மூலமாய்த் தண்ணீரானது, அடியிலுள்ள பாத்திரத்தில் வடிந்துவிட, பொடிகள், அத் துணியின்மேல் நின்று விடுகின்றன.

இனி, இவ்வாறே, தண்ணீர்முதலியவற்றை வடிகட்டுவதற்கு, மையொற்றுங்கடிதத்தையும் உபயோகப்படுத்தலாம். எப்படியென்றல், மையொற்றுங் கடிதமொன்றை வட்டமாய்க் கிழித்து, அதை, முதலில், இரண்டாய் அர்த்த சந்திராகாரமாக மடித்து, அப்பால் அம்மடிப்பை இரண்டாய் மடித்து. அதனை, புனல் என்னுங் கருவிபோல, அடிப்புறம் குவிந்தும், மேற்புறம் விரிந்துமிருக்குமாறுசெய்து, அதை, கண்ணாடிப்புனலில்வைத்து, மறுபக்கத்திற் படத்திற்காட்டியபடி அதில் நீர்முதலியவற்றை ஊற்றவேண்டும். இப்படியூற்றினல் அந்நீர் முதலியுவை, அக்கடிதத்

திலுள்ள மிகச்சிறிய துவாரங்களின் மூலமாய் அடியிலுள்ள பாத்திரத்தில் படிய, கனத்த வஸ்துக்கள் கடிதத்தின்மேல் நின்று விடுகின்றன. இதனால், தண்ணீர் சுத்தியாகின்றது.



இனி, வேறுவிதமாயும் நீரைச்சுத்திசெய்யலாம். அதாவது, மரத்தினலாவது, மூங்கிலினலாவது மூன்று அடுக்

குள்ள பரண் ஒன்று செய்து, அதில், ஒவ்வொருதட்டிலும் நேருக்கு நேராய் ஒவ்வொரு புதுப்பானையை வைக்கவேண்



டும். அவற்றில், அடியிலுள்ள பானையொன்று தவிர, மற்றை இரண்டு பானைகளிலும் மிகச்சிறிய சில்லிகள் இருக்க வேண்டும். மேற்பானையில், பாதிவரையில் கூழாங்கற்களையும் அடுப்புக் கரியையும், இரண்டாம் பானையில் முற்கூறியபடி மணலையும் அமைத்து, மேற்பானையில் நல்லதண்ணீரைச் சிறுகச் சிறுக ஊற்றினால், அந்நீர், மணலிலும் அடுப்புக்கரியிலும் சுவர்ந்து, கீழேயிருக்கும் பானையில் துளித்துளியாய் விழும். மேலும், அப்பானைகளில், தூசி விழாதபடி சிறுதுவாரங்களுள்ள மூடியால் மூடி வைத்தால் அவசியமாம். சில நாட்களுக் கொருமுறை, மேற் பானையிலுள்ள மணலையும், கரியையும் எடுத்து விட்டு, புதியமணலையும் கரியையும் சேர்க்க வேண்டும்.

சம்பாஷணைக் கேள்விகள் :—1. தண்ணீரை மையொற்றுங் கடிதத்தால் வடிகட்டுதல் எப்படி? 2 மற்றொரு வகையாய் வடிகட்டுதல் எப்படி?

வாசகக்கட்டு :—1. மையொற்றுங் கடிதத்தால், வடிகட்டலைப்பற்றிச் சிற்சில வாக்கியங்கள் சொல்லும்படி கேட்டல். 2. பாண்பானை மூலமாய் வடிகட்டலைக் குறித்துக் கேள்வி கேட்டல்.

கிண்டர்கார்டன் அப்பியாசம் :—1. வ்டிகட்டுதற்கு உரிய கருவிகளின் உருவத்தைக் கற்பலகையில் எழுதுதல். 2. அதையே உரியபடி குச்சிவைத்தலும், கடிதத்தை மடித்துக்காட்டலும்.

23. செடிகள்: பொது அமைப்பும், உறுப்புக்களும்.

பிராணிகள், இடம் விட்டு, அங்குமிங்கும் நடமாடலால், அவற்றை மாத்திரம் உயிருள்ளனவென்று எண்ணு

கின்றார்கள். அது பிசகு. இனி, மரம் முதலிய தாவரப் பொருள்களும், இடம்விட்டுப் பெயராமல், அவை அழியும் வரையில், ஓரிடத்திலேயே நிலையாய் நின்றாலும், அவையும் உயிருள்ளனவேயாம்.

இனி, பிராணிகள், சுருசுருப்பாய் இடம்விட்டுப் பெயர்ந்து, தமக்கும் பிறர்க்கும் வேண்டிய காரியங்களைச் செய்துகொள்ளுகின்றன. தாவரங்களோ என்றால், அவை, இடம் விட்டுப் பெயராமையோடு, தமக்காகப் பிறர் செய்யும் செயலை மாத்திரம் பெறுகின்றனவேயல்லாமல், தமக்கென்று எதனையும் தாமே செய்துகொள்ளச் சக்தியுடையனவல்ல.

தாவரங்கள் எல்லாம் ஒரேமாதிரியா யிராமல் இலைகளாலும், புட்பங்களாலும், பழங்களாலும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயே யிருக்கின்றன. இங்ஙனம் அவை ஒன்றுக்கொன்று வேறுபட்டிருப்பினும், எல்லாத் தாவரங்களுக்கும் மூன்றுபெரும் பிரிவுகள் உண்டு. அவை வேர், தண்டு, இலை என்பன. இவை, தாவரங்கள், உயிரோடிருப்பதற்கும், வளர்ச்சிக்கும் ஆதாரமாயுள்ளன. இன்னும் இம்மூன்றும், தம்மிடமாக, வேறுபற்பல புதிய செடிகள் உண்டாவதற்குக் காரணமாயுள்ள புஷ்பங்கள், பழங்கள் விதைகள் ஆகிய இவற்றை உண்டாக்குகின்றன.

செடியின் வேரானது, கீழ்நோக்கி வளர்ந்து பூமிக்குட் சென்று பரவுகின்றது. தண்டானது, மேல் நோக்கி வளர்ந்து பருத்து அடிமரமாகின்றது. இலைகள், தண்டுகளிலும், அத்தண்டுகளில் தோன்றிவளரும் கப்புக்களிலும், கிளைகளிலும் உண்டாகின்றன.

புஷ்பங்கள், பிஞ்சாகமாறி, அவை காலக்கிரமத்தில் முற்றிப் பழமாக, அப்பழங்களில் விதைகளுண்டாகின்றன.

அப்பழங்களின் விதைகளால்தான் பெரும்பாலும் வேறு புதிய செடிகள் முளைத்து வளருகின்றன. விதையானது பார்வைக்கு உயிரற்றது போலத்தோற்றுகின்றது. ஆனால், அதை பூமியில் ஊன்றவைத்தால், பூமியின் ஈரமானது அவ்விதையில் உறைக்க, அதினின்றும் முளைகிளம்புகின்கிறது. அப்பால், நீர் ஊற்ற ஊற்ற நாளடைவில் அதிலிருந்து இலைகளும், தண்டும், கிளைகளும்தோன்றிவளர்கின்றன.

சம்பாஷணைக் கேள்விகள்:—1. பிராணிகளுக்கும், தாவரங்களுக்கும் வித்தியாசமென்ன? 2. தாவரங்க்ள் எவ்வெவற்றால் வித்தியாசமாயுள்ளன? 3. செடிகளின் பிரிவுகள் எத்தனை? என்னென்ன? 4. புஷ்பம் முதலியவற்றின் உபயோகம் என்ன? 5. வேர், பூ, பழம் இவற்றின் குணமென்ன?

வாசகக்கட்டு:—1. செடிகளின் அமைப்பையும், உறுப்புக்களையும் பற்றிச் சொல்லச் சொல்லல். 2. பூ, பழம் ஆகிய இவற்றைக் குறித்துச் சிற்சில வாக்கியங்கள் சொல்லும்படி கேட்டல்.

கிண்டர் கார்டன் அப்பியாசம்:—1. இலைகள் போலவும், தண்டு போலவும், பழம் போலவும், பூப்போலவும் தனித்தனி எழுதுதல். 2. மரம்போலத் தனியே கற்பலகையில் எழுதுதல்.

---

24. வேர்கள்.



முன்பாடத்தில், தாவரங்களும், பிராணிகளைப் போலவே உயிருள்ளனவெனச் சொன்னோமல்லவா! ஆதலால், அவற்றுக்கு உணவு அவசியமேயாம். அவை அவ்வுணவை, வேர்களின்மூலமாய்க்கொள்ளுகின்றன. ஆகவே, அவ்வேர்

களைக் குறித்து சிற்சில விஷயங்களை இங்குக் கூறுகின்றோம் :—

தண்டுகளில் கிளைகளிருத்தல் போலவே, வேர்களிலும் சிறிய கிளைகளிருக்கின்றன. ஆனால், வேரின் கிளைகளில் இலைக்குருத்துக் களுண்டாவதில்லை. இலைக்குருத்துக்கள் தண்டுகளில் மாத்திரமே யுண்டாகும். வேர்களின் முக்கியமான குணம், பெரும்பாலும் பூமிக்குட்சென்று வளர்வதும், கிளைகளை மாத்திரம் பெற்று, இலைக்குருத்துக் களைப்பெறு திருத்தலுமேயாம். இனி, மேற்கூறிய படி பூமிக்குட்செல்லும் பகுதியில இலைக்குருத்துக்களிருந்தால், அது வேர் அன்றென அறியவேண்டும்.

செடிகளுக்கு முதலில் உண்டாகும் வேர், ஒன்றேயாம். அதற்கு,'ஆணி வேர்' எனப்பெயர். அப்பால், கிரமக்கிரமமாய்,அவ்வாணிவேரில், பற்பலகிளைவேர்கள் தோன்றுகின்றன. இனி, சிற்சில செடிகளில், ஆணிவேர்கள் சில காலத்தில் அழிந்துபோக, தண்டின் அடிப்பாகத்தில் மெல்லிய கம்பிகள்போன்ற பலசிறியவேர்கள்தோன்றி, அவற்றிற்கு ஆதாரமாய்ப் பருத்து வளர்வதுண்டு. என்றால், பெரும்பாலும், ஒரு வருஷத்தில் தோன்றி யழியும் நெல்முதலிய பயிர்களுக்கெல்லாம் இவ்வாறேயாம், என அறியவேண்டும். இங்ஙனம் தோன்றி வளரும் சிறிய வேர்களுக்குச் 'சிம்பு வேர்' எனப் பெயர் வழங்கும். மேலும் வேர்களில் 'சாதாரண வேர்' என்றும், 'ஒட்டுவேர்' என்றும் இரு வகையுண்டு. சாதாரணவேர், ஆணிவேரிலிருந் துண்டாகும். ஒட்டுவேர், தண்டுகளிற் பலவிடங்களிலுண்டாகும்.

சில செடிகளின் வேர்கள் தடித்துக் கிழங்குகளாகின்றன. இதை, முள்ளங்கிச் செடியிற் காணலாம். இம் முள்ளங்கியில், ஒரு செடியில், ஒரு கிழங்கேயிருக்கும். இன்னும், சர்க்கரைவெள்ளிக் கிழங்குச் செடிகளில்

தண்டுகளின் கணுக்களில் ஒட்டுவேர்கள்தோன்றி, பூமிக்குட்சென்று கிழங்குகளாகின்றன. ஆதலால், அச்செடிகளில், பற்பல கிழங்குகள் உண்டாதல் காணலாம்.



இனி வேர்களின் தொழில், செடிகள் கீழே விழாதபடி அவற்றைக் காப்பதும், நீரையும், மற்றை உணவையும் கிரகித்து, அவற்றை, செடியின் மேற்புறத்துக்குச் செலுத்துவதுமாம்.

சம்பாஷணைக் கேள்விகள் :—1. வேர்களின் வகை எத்தனை? என்னென்ன? 2. வேரின் குணமென்ன? 3. செடிகளுக்கு முதலில் உண்டாகும் வேர் எத்தனை? 4. ஒரு வருஷத்துப் பயிருக்கும், பலவருஷப் பயிருக்கும் வித்தியாசமென்ன? 5. முள்ளங்கிச் செடிக்கும், சர்க்கரை வெள்ளிக் கிழங்குச் செடிக்கும் எந்த விஷயத்தில் பேதமுண்டு?

வாசகக்கட்டு :—1. வேர்களைப்பற்றிச் சிற்சில வாக்கியங்கள் சொல்லும்படி கேட்டல். 2. அவற்றின் குணங்களை விவரிக்கச் சொல்லல். கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைக்க: 3. தண்டுகளின்—ஒட்டு வேர்கள்—4. சிலவேர்கள்—கிழங்குகளாகின்றன. 5. இதை, முள்ளங்கி—காணலாம்.

கிண்டர்கார்டன் அப்பியாசம் :—வேர் போல் எழுதுதல்.
2. முள்ளங்கிக் கிழங்குபோலக் கற்பலகையில் எழுது

தல். 3. அதையே களிமண்ணாற் செய்தலும், விதை வைத்தலும்.

25. அன்னப்பறவை.



அன்னப்பறவை, வாத்தினத்திற் சேர்ந்ததும், மிகப் பெரியதும், அழகானதுமான ஒரு பிராணி. அதன் குரல் காதுக்கு இனிமையாயிராது. ஆனல், அது கூவுவது அருமையாம். அது, எல்லாத் தேசங்களிலு முண்டு. நமது தேசத்திற்காணப்படும் அன்னம் வெண்மை நிற முடையதாயிருக்கும். இனி, கருமைநிறமுடைய அன்ன மும், சில தேசங்களிலிருப்பதாகக் கூறுகின்றனர்.

அன்னத்தின் இறகுகள், உடம்போடொட்டி, அடர்ந் திருக்கின்றன. அங்ஙனமுள்ள பெரிய இறகுகளின் உட்பிரதேசத்தில், மிருதுவான பல சிறு இறகுகளிருக் கின்றன: அன்னத்தின் உடல், வாத்துக்களின் உடம்பு போலப் படகையொத்துளது. அதன் கழுத்து மிகவும் நீண்டும், மெல்லியதாயும், வளைந்தும், சிறகுகள் பெரியவை யாயு மிருக்கின்றன. இனி, அன்னப்பறவை, தோலடிப் பாதங்களுடையதாதலால், அது, தண்ணீரில், இலே

சாயும், அழகாயும் நீந்துவது, பார்வைக்கு வெகு விநோத மாயிருக்கும்.

அன்னத்தின் மூக்கு, நீண்டும், அகன்றும், சிவப்பு நிறமாயுமிருக்கும். அதன் மேற்புறத்தில், கருநிறம் வாய்ந்த சிறிய கொண்டை யொன்றுண்டு. சாதாரணமாய் அன்னப்பறவை, எவர்க்கும் தீங்கு செய்யாமலும், சாந்த முள்ளதாயுமிருக்கும். ஆனால் அது, தனக்காவது, தன் குஞ்சுகளுக்காவது யாராவதொருவர் தீங்கு செய்தால், ஓடிச்செல்லாமல், தன்னையும், தன் குஞ்சுகளையும் காத்துக் கொள்ளும்.

ஆண் அன்னம், தன்னை யெதிர்க்கவந்த நாய் முதலிய சில சிறிய பிராணிகளுடன், மிகத் தைரியமாய்ப் போர் செய்யும். இன்னும், அன்னப்பறவை, ஆற்றங்கரைக்கு அருகிலுள்ள புல்தரையில், கூடிகட்டிக்கொண்டு வசிக்கும். பெண் அன்னம் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் இயல்பினது. அது, ஒரு தடவைக்குப் பல முட்டைகளிடும். அம்முட்டைகள், பசுமை கலந்த வெண்மை நிறமுடையனவாயிருக்கும்.

அன்னம் தண்ணீரிலேயே வளரும் சிறிய செடிகளின் விதைகளையும், நீரில்வாழுகின்ற சிறிய பிராணிகளையும், புழுக்களையும், பூச்சிகளையும் தின்னும். இனி, காட்டில் வசிக்கும் அன்னங்கள், ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்குச் செல்லும்போது, கூட்டங்கூட்டமாய்ப் பறந்து செல்லும்.

சிலர், அன்னத்தை, அழகுக்காகத் தம் தோட்டத்தின் தடாகத்தில் வைத்து வளர்ப்பதுண்டு. அதன் இறகு, தலையணைக்கும், மெத்தைக்கும் உதவும்.

சம்பாஷணைக் கேள்விகள்:—1. அன்னப்பறவை எவ்வினத்திற் சேர்ந்தது? 2. அதன் குரல் எப்படி இருக்கும்?

3. அதன் வழக்கமும் இரையும் யாவை? 4. அன்னத்தின் உபயோகம் யாது?

வாசகக்கட்டு:—1. அன்னத்தைப்பற்றிச் சிற்சில வாக்கியங்கள் சொல்லும்படி கேட்டல். 2. அன்னத்தின் தேக அமைப்பு முதலியவற்றைத் தலைப்பெயராகக் கொண்டு ஒவ்வொன்றையும் விவரமாய் எழுதும்படி சொல்லல்.

கிண்டர்கார்டன் அப்பியாசம்:—1. அன்னம்போல எழுதுதல். 2. அதன் கழுத்துப்போலவும், கால்போலவும் தனித்தனி எழுதுதல்.

26. ஆமையும், அன்னமும்.

ஓர் ஊரிலிருந்த ஒரு தடாகத்தில், ஒரு ஆமையும், இரண்டு அன்னங்களும் வசித்தன. அவை, இளமைமுதல்

ஒன்றோடொன்று சிநேகமாய்க் கூடிவாழ்ந்துகொண்டு, அத் தடாகத்திலேயே பலவருஷங்கள் இருந்தன. ஒருவருஷம்



மழை இல்லாமற் போயிற்று. போகவே, குளத்தில் நீர் வற்றி வறண்டுபோகும் தருணமாயிருந்தது. அன்றியும், சிலகாலம் மழை பெய்யாது என்றும், அவ் வன்னங்களுக் குத் தோன்றியது. அதனால், அன்னங்கள் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப் போகவேண்டும் என்று எண்ணின. அந்த எண்ணத்தை, தங்களுடன் வெகு நாளாய்ச் சிநேகம் கொண்ட ஆமையினிடம் சொல்லாமற்போவது சரியன்று என நினைத்து, அதனிடம் சொல்லின.

அப்போது ஆமை, அன்னங்களை நோக்கி, "இந்த ஆபத்தில் நீங்கள் என்னைத் தனியே விட்டுப்போவது தக்கதன்று. என்னையும் உங்களோடு அழைத்துக் கொண்டுபோகவேண்டும்," என்று வேண்டிக்கொண்டது. அதற்கு அந்த அன்னங்கள், "நீ சொல்வது சரிதான். இந்த ஆபத்தில் உன்னைத் தனியேவிட்டுப் போக எங்க ளுக்கும் மனமில்லை. ஆகிலும், எங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நாங்கள் அப்படிச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் வேறுவழியில்லை. நாங்களும் தப்புவது அரிதாகும். உன்னையும் கூட்டிக்கொண்டு போகும் விஷ யத்தில் மிக்க வருத்தமுண்டாகும். நாங்களோ வெகு

தூரம் செல்லவேண்டியிருக்கின்றது: ஆனால், பறந்துபோவோம். உன்னால் பறக்கமுடியாது. ஆயினும் நீ, நாங்கள் சொல்லும் ஏற்பாட்டின்படி நடப்பாயானால், நாங்கள் உன்னையும் காப்பாற்றக்கூடும்,'' என்று கூறின. உடனே ஆமை, "அந்த ஏற்பாடு, யாது?'' என்று மிக்க ஆவலோடு கேட்க, அன்னங்கள், நீ எங்களுடன் வருகையில், வாய் திறக்காமல் மவுனமாய் இருக்கவேண்டும். இதுவே எம்முடைய ஏற்பாடு. போகும் வழியில் யாராவது எம்மோடு பேசுவார்கள். அப்போது, உனக்கும் பேசவேண்டும் என்று தோன்றக்கூடும். அப்படி நீ பேசாமலிருப்பது உண்மையானால், அழைத்துக்கொண்டு போகின்றோம்; பேசுவாயானால் உனக்கே கெடுதி உண்டாகும்!'' என்று சொல்ல, ஆமை, "அப்படியே ஆகட்டும்,'' என்று சொல்லிற்று.

பிறகு அன்னங்கள், ஆமையை நோக்கி, "இந்தக் கொம்பை, நீ உன்னுடைய பற்களால் கவ்விக்கொள். நாங்கள் இருவரும், இதன் இரண்டு பக்கங்களையும், எங்கள் மூக்கினால் கவ்விக்கொண்டு, ஆகாசவழியாய்ப் பறந்து போகின்றோம்,'' என்று சொல்லின.

ஆமையும் அப்படியேசெய்ய, அன்னங்கள் இரண்டும் தாம் கூறியபடி அதைத் தூக்கிக்கொண்டு பறந்து சென்றன.

இப்படி, அவை ஒரு நகரத்தின் மீது செல்லுகையில் அங்குள்ள சனங்கள் இந்த ஆச்சரியத்தைக் கண்டு கை கொட்டிச்சிரித்தார்கள். அப்போது, ஆமை, "இப்பெருங் கூச்சலுக்குக் காரணம் யாது?'' என்று, அன்னங்களைக் கேட்பதற்கு வாயைத் திறந்தமாத்திரத்தில், திடீரென்று கீழே விழுந்து இறந்தது.

ஆதலால், நாம் ஆபத்துக் காலத்தில், நம் நேசர்களுடைய வார்த்தையைக்கேட்டு அதன்படி நடந்துகொள்ள வேண்டும். எந்தக் காரியத்திலும் அவசரம் கூடாது. நம்முடைய நண்பர் நமக்குச் சொல்லும் இதமான பேச்சுக்களை, நாம், ஒருபோதும் மறக்காமல் ஞாபகத்தில் வைத்திருத்தல் அவசியம். ஆலோசனையில்லாமல் ஒரு காரியத்தையும் செய்யக்கூடாது.

சம்பாஷணைக் கேள்விகள்:—1. அன்னம் எங்கிருந்தது? 2. அதனோடு நேசமாயிருந்தது யாது? 3. அன்னம் எண்ணியது என்ன? 4. ஆமை, அன்னத்தினிடம் சொல்லியது யாது? 5. அவை செய்து கொண்ட ஏற்பாடு என்ன? 6. அப்பால் நடந்தது யாது? 7. இக்கதையின் நீதி யாது?

வாசகக்கட்டு:—1. ஆமையைக் குறித்தும், அன்னத்தைக் குறித்தும், சில வாக்கியங்கள் சொல்லும்படி கேட்டல். 2. இக்கதையின் நீதியை, விவரிக்கச் சொல்லல்.



கிண்டர்கார்டன் அப்பியாசம்:—1. இங்குக் காட்டிய படம் போலக் கற்பலகையில் எழுதுதல். 2. ஆமைபோலத் தனியே எழுதுதல்.

27. ஆமையும், அன்னமும்: பாட்டு.

இங்கிலீஷ் நோட். தாளம்-ஏகதாளம்.

பஸ்ஸ நீதபா—மகமபாம மகமபாம—பஸ்ஸ நீதபா.

1. அன்னபக்ஷியும்—ஆமைதானும்
அன்புகொண்டு—நண்புசெய்தன
2. அவற்றின் செய்தியை—அறியச் சொல்லத்
தெரியக் கேளும்—அகமகிழ்ந்து நீர்.
3. பன்னாள் முன்னரோர்—பதியிலுள்ள
குளத்து நீரில்—வசித்தி ருந்தநல்
4. அன்ன மிரண்டு மோர்—ஆமையோடு
அன்புமிக்கு—நண்பு கொண்டன.
5. அங்கோர் காலத்தில்—அக்குளத்தில்
மழையில்லாமல்—நீர் வறண்டதால்
6. அன்னங் தாங்களும்—அப்பதியின்
நின்றும் வெளியில்—அகலக் கருதியே
7. அதனை அன்னவை—ஆமை தனக்கும்
அறியக் கூற—அதுவும் வருவதாய்க்
8. கூற அவைகள் தாம்—“குறியகாலைக்
கொண்டு தரையில் நகர்வை மெல்ல நீ!
9. யாங்களுயரவே—எளிதிற் பறந்து
செல்வோ மெங்கட்—கிற கிருத்தலால்!
10. எனினும் நாங்களோர்—இனிய சூழ்ச்சி
உனக்குக் கூற—உற்றுக் கேளதை:—
11. என்று சொல்லியே—இருந்த சிறிய
கொம்பைக்காட்டி—இவ்விதம் சொலும்:

12. " இந்தக்கொம்பை யாம்—இரண்டு முனையைக்
கவ்விக் கொள்ள—நீ யுன் பற்களால்

13. கவ்விக் கொண்டு பின்—கவனமாகக்
கடித்துக் கொள்ளப்—பறந்து போகின்றோம் ;

14. போகும் வழியில் நீ—பேச வர்சை
கொள்ளின் நாசம்—அடைவை, நிச்சயம் !

15. என்று சொல்லவும்—ஏழை ஆமை
இணங்கி யிருக்க—இரண்டன் னங்களும்

16. பறந்து போகவும்—பாரிலுள்ளோர்
பார்த்துப் பார்த்து—நகைத்துக் கைகொட்ட

17. அவ்விரைச்சலை—ஆமையென்ன
தென்று கேட்க—ஆசை கொண்டு தன்

18. வாய்திறக்கவும்—மனம் பதைத்து
மண்ணில் வீழ்ந்து—மாண்ட தங்கது !

19. ஆதலாலென்றும்—ஆபத்தொன்று
நேருமாயின்—அன்பர் பேச்சினை

20. இதமதாகவே—எங்கும் போற்றின்
இன்பமெய்தி—இனிது வாழலாம்.

28. ஆந்தை.

ஆந்தை, இரவில் சஞ்சரிக்கக்கூடிய ஒரு பறவை. அது, பகல் முழுவதும் படுத்து உறங்கி, இரவிலேயே இரை தேடத் திரியும். அதற்கு, கண்களும், அதற்குத் தகுந்த படி இரவிலேதான் நன்ருய்த் தெரியும்; பகலில் நன்ருய்த் தெரியமாட்டா. ஆதலால் அதற்கு, 'திவாந்தம்' என்றும் ஒரு பெயர் உண்டு. அது இரவில் இரைதேடச் செல்லுகையில், கண்களின் கூர்மையால், அங்கங்கே இருக்கின்ற மிகச்சிறிய ஜந்துவையும் தெரிந்துகொள்ளும். அதன் காதுகளும், சூக்ஷமமாய், மெதுவான சுத்தத்தையும் கேட்கத்தக்க தன்மையுடையன.

ஆந்தையின்தலை பெரிதாயிருக்கும். அதன் தலையில், கொம்புகள் போன்ற சிறகுகளின் குச்சுக்கள் இரண்டு

இருக்கும். மேலும், அது குளிரால் வருத்தமடையாதபடி தன்னைக்காப்பாற்றுதற்காக, அதன் சிறகுக்குள், பஞ்சுபோன்ற சிறிய இறகுகள், உடம்போடடர்ந்து ஒட்டிக் கொண்டிருக்கின்றன. அப்படி அவை இருப்பதால், ஆந்தை ஆகாயத்திற் பறக்கும்போது சத்தம் சிறிதும் உண்டாகாது. அது பறந்து செல்லும்போது பார்த்தால் காற்றுத்தான் அதைத் தள்ளிக்கொண்டு போகிறதோ என்று எண்ணத்தக்க அவ்வளவு இலேசாய்ப் பறக்கும்.

ஆந்தையில் அநேகசாதியுண்டு. முதலாவது, "வெள்ளையாந்தை." அது, அதிக வெண்மைநிறமுடையதாயிருக்கும். அது, வட அமெரிக்கா கண்டத்திலும், ஐரோப்பா கண்டத்தின் வட பாகங்களிலும் சஞ்சரிக்கின்றது. ஏறக்குறைய இரண்டு அடி நீளமுள்ளது. முயல், சிறிய பக்ஷிகள் முதலியவற்றைத் தின்று சீவிக்கும். அது தரையிலேதான் முட்டையிடும். ஒவ்வொரு தடவையிலும், மூன்று, அல்லது நான்கு முட்டைகளிடும். ஆயினும் அவற்றில், இரண்டு முட்டைகளுக்குமேல் பொரிப்பது அரிது.

ஆந்தையில் இரண்டாவது ஜாதி, "கழுகு ஆந்தை." அது ஆந்தைச்சாதிகள் எல்லாவற்றிலும் பெரிது. அதற்கு வலிமையும் அதிகம். எலி, சுண்டெலி முதலியவற்றைத் தின்று சீவிக்கும். சில சமயங்களில் முயல், சிறுமான் முதலியவற்றையும் எதிர்த்துக் கொன்று தின்னும். அதுவும் வெள்ளையாந்தை சஞ்சரிக்கின்ற இடமாகிய வட அமெரிக்கா முதலிய இடங்களிலேயே சஞ்சரிக்கின்றது, ஆனால் அது, வெள்ளை ஆந்தைபோல் நிலத்தில் முட்டை இடாமல், மலைகளிலுள்ள பிளவுகளில் முட்டையிடும்.

மூன்றாவது சாதி, "வைக்கோற்போர் ஆந்தை." அது, சாதாரணமாய் வைக்கோற்போரிலேயே இருக்கின்

றது. அந்த ஆந்தை, குடியானவர்களுக்கு அதிக உபத்திரவஞ்செய்கின்ற சுண்டெலி முதலியவற்றைக் கொன்றுதின்கிறதாயினும், அவர்கள் அதைக் கண்டால் உடனே கொன்று விடுவார்கள். அது, ஒரு சிறிய புறு அளவு பருமனுள்ளது. அதன் குணம், பெரும்பாலும் பூனையின் குணம்போன்றது. அதற்கு ஏதாவது மனத்தில் அதிருப்தியுண்டானால், பூனைபோலவே ஒரு விதச் சத்தம் செய்யும். அதன்பார்வையோ, பூனையின் பார்வையை ஒத்திருக்கும்.

அது, சீமைச் சுண்ணும்புக் கட்டிபோல், வெண்மையான மூன்று, அல்லது நான்கு முட்டைகளிடும். அது வேறு ஏதாயினும் ஒரு பக்ஷி வந்து தன்னை எதிர்த்தால் நேராக நின்று சண்டை செய்யாமல், தரையில் மல்லாந்து கிடந்து, தன் மூக்கினுலும், கூர்மையான நகங்களாலும் சண்டை செய்யும்.

மற்றொரு வகையான ஆந்தையுமுண்டு. அது பூமிக்குள் அநேக அடி ஆழமுள்ள வளைகளில் இருப்பதால் அதற்கு, "வளை ஆந்தை" என்று பெயர் வழங்குகின்றது. அது, பார்வைக்கு ஆந்தைபோலிருக்கின்றதே யாயினும் பகலில் இரைதேடச் செல்லும்.

சம்பாஷணைக் கேள்விகள் :—1. ஆந்தை எப்பொழுது சஞ்சரிக்கும்? 2. அதற்கு வழங்கும் பெயர் யாது? 3. ஆந்தையில் எத்தனை வகையுண்டு? 4. அதன் வழக்கம் என்ன? 5. ஆந்தை, ஒருதடவைக்கு எத்தனை முட்டையிடும்?

வாசகக்கட்டு :—1. ஆந்தையைக் குறித்துச் சிற்சில வாக்கியங்கள் சொல்லும்படி கேட்டல். 2. அதன் கண்ணையும், வழக்கத்தையும் குறித்து விவரிக்கச்சொல்லல்.

கிண்டர்கார்டன் அப்பியாசம் :—1. ஆந்தைபோல எழுதுதல். 2. அதன் தலை முதலிய அவயவங்களைத் தனித் தனியே எழுதுதல்.

29. சுல்தானும், மந்திரியும்.

முற்காலத்தில், இந்தியாமீது படையெடுத்துவந்த மகமதிய சுல்தான்களில் முக்கியமானவன், 'கிஜினிமாமூது' என்பவன். அவன், கடினசித்தமும், குரூர குணமுமுள்ளவன். இந்தியாவின்மேற் பன்னிரண்டு தடவை படையெடுத்துவந்தான். அப்படிப் படையெடுத்துவந்த ஒவ்வொரு தடவையிலும், அநேக இடங்களிலுள்ள தேவாலயங்களை இடித்து, ஆங்காங்குள்ள விக்கிரகங்களையும் உடைத்துச் சின்னபின்னமாக்கினன். ஆதலின் அவனுக்கு 'விக்கிரகமுடைப்போன்', எனப் பெயர் வழங்கலாயிற்று. அவன்சென்ற இடங்களிலெல்லாம், குடிஜனங்களை வரு

த்தி, நிர்ப்பந்தஞ் செய்தமையால், அவன் வருகையைக் கேள்விப்பட்ட குடிகள்யாவரும், தங்கள் தங்கள் சாமான்க



ளைக் கிடந்த கிடந்த இடத்திலேயே விட்டு விட்டு ஓடிப்போவது வழக்கம். அப்படி அவர்கள் அவனுக்குப் பயப்பட்டு ஓடிப்போனதனல், அனேக இடங்கள் பாழாயின. அவன், எவர் சொல்லையும் கேளாத மூர்க்கன். ஆனல் அவனுடைய மந்திரி, குடிகளிடத்துக் கருணையுள்ளவனும், சகல தந்திரங்கள் தெரிந்தவனுமாயிருந்தான். அரசன் செய்யும் கொடுந் தொழில்கள் அவனுக்கு அருவருப்பாயிருந்தன. மந்திரி, பலதரம் நீதியெடுத்துச் சொல்லியும், அரசன் தன் வழக்கப்படியே நடந்து வந்தமையால், அவனை நல் வழிக்குக்கொண்டு வருவதற்கு ஒருபாயஞ் செய்தான்; அது யாதெனில்,

மந்திரியானவன், தனக்குப் பக்ஷிபாஷை தெரிவது போல நடித்து, பக்ஷிகள் பேசும்பொழுதெல்லாம் அவற்றின் சமீபத்திற்சென்று, அவ் வொலியை உற்றுக்கேட்டுக்கொண்டிருந்தான். அதைப்பார்த்த கிஜினிமாமூது மந்திரியை அழைத்து, "ஓ மந்திரி! பக்ஷிகள் பேச்சை நீ அதிக ஆவலுடன் உற்றுக்கேட்பதை, யான் பலதரம் பார்த்திருக்கின்றேன். அவைகளின் பேச்சு உனக்கு ஏதாவது புலப்படுகின்றதா? அதனை நீ எங்குக்கற்றாய்" என்றான். அது கேட்ட மந்திரி, "ஐயா! யான் சில வருஷங்களுக்குமுன், பாரசீகதேசம் சென்றிருந்தேன். அங்கு ஒரு தத்துவ ஞானியிருந்தார். அவருடையகிருபாகடாக்ஷத்தால், பறவைப்பேச்சை நான் கற்றுக்கொண்டேன். அது முதல், யான் பறவைகளின் பேச்சைக் கேட்டறிந்து கொள்வது வழக்கம்," என்று மறுமொழி கூறினான். அதுகேட்டு அரசன் சந்தோஷமடைந்தான்.

இப்படி இருக்க, ஒருநாள், அவ் வரசனும் மந்திரியும் ஒரு பாழான ஊரின் வழியாய்ப்போக நேரிட்டது. அவ்வூரிலுள்ள ஒருபாழ்ஞ்சுவரில், இரண்டு ஆந்தைகள் உட்கார்ந்து கிளை கூட்டிக்கொண்டிருந்தன. அதைப்பார்த்த மாமூது, மந்திரியை நோக்கி, "மந்திரி! உனக்குப் பக்ஷிபாஷை தெரியுமே! இதோ இரண்டு ஆந்தைகள் ஏதோ பேசிக்கொண்டிருக்கின்றன. அப்பேச்சு இன்னதென்று நீ தெரிந்து சொல்லவேண்டும்," என்றான். உடனே மந்திரி, 'அரசனை நல்வழிப்படுத்துவதற்கு இதுவே தக்க சமயம்,' என்று எண்ணி அவனை நோக்கி, "இதோ அறிந்துவருகிறேன்," என்று அப்பறவைகளின் அருகே சென்று, தன்காதில் விரலை வைத்துக்கொண்டு, உற்றுக்கேட்பதுபோல் நின்றான்.

அரைமணி நேரத்துக்குப் பின்பு, அவ்விரண்டு ஆந்தைகளும் பறந்துபோய்விட்டன. உடனே மந்திரி, அரசனிடம் வந்து, "மகாப்பிரபு! அடியேனை மன்னிக்கவேண்டும். அவை பேசிக்கொண்டிருந்த சங்கதிகளைத் தங்களிடம் கூற என்மனந் துணியவில்லை! அடியேன்மேல் அணுவளவும் கோபங்கொள்ளாமலிருக்க வேண்டும்," என உண்மையாய்ப் பயப்படுவதுபோற் பாசாங்கு செய்தான், அப்பொழுது அரசன், மந்திரியை நோக்கி, "மந்திரி! நீ கொஞ்சமேனும் அஞ்சவேண்டாம். அவை கூறியவற்றை அணுவளவும் மறைக்காமற் சொல்,"என்று, அதிக ஆவலுடன் கேட்டான். அப்போது மந்திரி, இதுவே தக்க சமயம் எனத் தீர்மானித்து, "ஐயா! தேவரீர் சற்றுக் கவனமாய்க் கேட்க வேண்டும்: அவ்விரண்டு ஆந்தைகளில், ஒன்றுக்கு ஒரு ஆணும், மற்றொன்றுக்கு ஒரு பெண்ணும் இருக்கின்றனவென்றும், அவ்விரண்டிற்கும் கலியாணஞ் செய்ய வேண்டும் என்றும் பேசிக்கொண்டிருந்தன. இன்னும், அவற்றுள் ஆணையுடைய ஆந்தை, பெண்ணையுடைய ஆந்தையைப்பார்த்து, "உன்பெண்ணை,என் பிள்ளைக்குக் கலியாணஞ்செய்துகொள்வதில் எனக்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை. ஆனால், உன்பெண்ணுக்குச் சீதனமாக ஐம்பது பாழான வீடுகள் கொடுக்கவேண்டும்," என்று சொல்லியது. அதற்குப் பெண்ணையுடைய ஆந்தை, "இதெவ்வளவு! கடவுளின் கிருபையால், நம்முடைய சுல்தான் கிஜினிமாமூது மாத்திரம் சீவித்திருந்தால், பாழ் வீடுகளுக்குப் பஞ்சமேயில்லை. ஐம்பதேயல்ல, ஐந்நூறுவேண்டுமாயினும் தருகிறேன்," என்று மறுமொழி கூறிற்று," என்று சொல்லி முடித்தான். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன், அரசன் வெட்கித் தலைகுனிந்து, தான் முன்செய்த

தீமைக்காக மனம் வருந்தி, அன்று முதல் தன் குடிகள் மீது பக்ஷம்வைத்து நீதி செலுத்தத் தொடங்கினுன்.

சம்பாஷணைக் கேள்விகள்:—1. சுல்தான்களில் முக்கியமானவனுடைய பெயர்யாது? 2. அவன் எப்படிப்பட்டவன்? 3. மந்திரியின் குணம் யாது? 4. மந்திரி அரசனுக்கு யாதுசெய்யக்கருதினுன்? 5. அப்பால்அவன் செய்தது யாது? 6. பின்பு, அரசன் அடைந்த நன்மை என்ன?

வாசகக்கட்டு:—1. சுல்தானைப்பற்றியும், மந்திரியைப் பற்றியும் சிற்சில வாக்கியங்கள் சொல்லும்படி கேட்டல். 2. அரசனுக்கும், குடிகளுக்குமிருக்கவேண்டிய குணங்களை விவரிக்கச் சொல்லல்.

கிண்டர்கார்டன் அப்பியாசம்:—1. இங்குக் காட்டியபடி, படத்தைக் கற்பலகையில் எழுதுதல். 2. சுல்தான் போலவும், மந்திரி போலவும் தனித்தனி எழுதுதல்.

---

30. சுல்தானும், மந்திரியும்: பாட்டு.

---

1. ‘மன்ன ஞவான் மன்னுயிர் தம்மைத்
தன்னுயிர் போலக் காத்தலே தகுதி,
என்னும் நீதி இயற்கையில் இலனும்
மன்னன் கிஜினி மாமு தேன்பான்

5. குடிகளை வருத்திக் கொடுமை செய் தேன்றும்
படியினில் நன்மை தீமைகள் பாரான்

ஆதலின் அவன்தன் மந்திரியாவான்
தீதிலா துபாயம் தெரிந்தான் : அதனை,
ஓதுவோம் இங்கே உற்று நீர் கேளும் :
பறவைகள் பேசும் பாஷைக ளைத்தான்
பரக்கக் கற்ற பண்டிதன் போலக்
கட்டினா னந்த மந்திரி காணீர்!
வேட்டை யாட வெளியே அரசன்
செல்லும்போது சிறந்தமந் திரியும்
நல்ல தருணம் நாடினன் ஆக
அரசனை அண்டி அன்புடன் நன்கு
சரசமாய்ப் பேசிச் சென்றனன் : கலந்து
போகும் போதோர் பாழ்ஞ்சுவர் தன்னில்
ஆகும் மந்திரிக்கு ஆவதோர் வகையால்
இரண்டு பேராந்தை இருந்துகொண் டங்கே
பொருந்தத் தம்முள் பேசின : அதனை,
கண்டமா ழுது கலந்தமந் திரியை.
"அண்டி நீ அதனை அறிந்துவா!" என்ன,
மந்திரி மிகவும் மகிழ்வோடு சென்று
தந்திரம் வல்ல சதுரனா னதனால்
அறிபவன் போல அமைதியாய்க் கேட்டுப்
பெரிதும் பயந்தே பேசுதல் போன்று,
" ஐயே! அரசே!! அதனையான் கூறல்
எவ்வா றென்றே ஏங்கிநிற் கின்றேன்!"
என்னவும், அரசன், "எடுத்துரை!" என்ன,
பன்னினான் அதனைப் பக்குவமாக:—
ஆந்தை யிரண்டில் ஆணொன் றுக்கும்
ஆங்கே அமைந்த பெண்ணொன் றற்கும்
இருத்தலால் அந்த இரண்டு பக்ஷிகட்கும்

பொருத்தமா யவைகள் பேசின மணத்தை :
ஆணுக் குரிய ஆந்தையோ என்றால்,
வேணுமென் றது,"பாழ் வீடுகள் ஐம்பது:"
பெண்ணுக் குரிய ஆந்தைதான் பெரிதும்
எண்ணி அங்கே இயம்பிய திப்படி:—
"கடவுள் கிருபையால் கண்டமா மூது
திடமாய் சீவித் திருப்பதுண் டானால்
ஐம்பதே அல்ல அதற்குமேல் எனினும்
எங்கும் கிடைக்கும் எளிதினில் அன்றோ !"
என்னக் கேட்டேன்," என்றனன், மந்திரி :
என்ன மாமு திரக்கங் கொண்டு
வெட்கிப் பின்பு விரும்பியே உயிரை
நட்பாய் நாளும் நன்கு காத்தனனே !

செய்யுட் பாடம்.

வெற்றிவேற்கை.

1. எழுத்தறி வித்தவ னிறைவ னாகும்.
2. கல்விக்கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4. வேதியர்க் கழகு வேதமு மொழுக்கமும்.
5. மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை.
6. வைசியர்க் கழகு வளர்பொரு ளீட்டல்.
7. உழவர்க் கழகிங் குழுதூண் விரும்பல்.
8. மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.
9. தந்திரிக் கழகு தறுக ணாண்மை.
10. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
11. பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்.
12. குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்.
13. * * * *
14. அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
15. வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை.
16. தேம்படு பனையின் றிரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவற் கிருக்க நிழலா காதே.
17. தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினு மண்ணல் யானை
அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
18. பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்.

சென்னை-600 00

19. சிறியோ ரெல்லாஞ் சிறியரு மல்லர்.
20. பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்.
21. உற்றா ரெல்லா முறவின ரல்லர்.
22. கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்.
23. அடினுமா வின்பால் தன்சுவை குன்றாது.
24. சுடினுஞ் செம்பொன் றன்னொளி கெடாது.
25. அரைக்கினுஞ் சந்தனந் தன்மண மாறாது.
26. புகைக்கினுங் காரகில் பொல்லாங்கு கமழாது.
27. கலக்கினுந் தண்கடல் சேறா காது. [காய்-
28. அடினும்பால் பெய்துகைப் பறாதுபோய்ச் சுரைக்
29. ஊட்டினும் பல்விரை யுள்ளி கமழாதே.
30. ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை.
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

31. நூறாண்டு பழகினு மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.

32. பெருமையுஞ் சிறுமையுந் தான்றர வருமே.
33. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.

34. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே.

35. கற்கை நன்றே கற்கை நன்றே.
36. பிச்சை புகினுங் கற்கை நன்றே.
37. கல்லா வொருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.

38. நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னாயிற் கீழிருப் பவனே.

39. எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடி கற்றோரை மேல்வரு கென்பர்.

40. அறிவுடை யொருவனை யரசனும் விரும்பும்.

41. அச்சமுள் ளடிக்கி யறிவகத் தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி
எச்சமற் றேமாந் திருக்கை நன்றே.

42. யானைக் கில்லை தானமுந் தருமமும்.
43. பூனைக் கில்லை தவமுந் தயையும்.
44. ஞானிக் கில்லை இன்பமுந் துன்பமும்.
45. சிதலைக் கில்லை செல்வமுஞ் செருக்கும்.
46. முதலைக் கில்லை நீத்து நிலையும்.
47. அச்சமு நாணமு மறிவிலோர்க் கில்லை.
48. நாளுங் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.
49. கேளுங் கிளையும் கெட்டோர்க் கில்லை.
50. உடைமையும் வறுமையு மொருவழி நில்லா.
51. குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினு நண்ணுவர்.

52. சிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோர்
அறக்கூழ்ச் சாலை யடையினு மடைவர்.

53. அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசோ டிருந்தர சாளினு மாளுவர்.

54. குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே யழியினு மழிவர்.

55. எழுநிலை மாடங் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பா ழாகினு மாகும்.

56. மணவணி யணிந்த மகளி ராங்கே
பிணவணி யணிந்துதங் கொழுந ரைத்தழீஇ
உடுத்த வாடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.

57. பெற்றமுங் கழுதையு மேய்ந்த வப்பாழ்
பொற்றொடி மகளிரு மைந்தருஞ் செறிந்து
நெற்பொலி நெடுநக ராயினு மாகும்.
58. இல்லோ ரிரப்பது மியல்பே யியல்பே.
59. இரந்தோர்க் கீவது முடையோர் கடனே.
60. நல்ல ஞானமும் வானமும் பெறினும்
எல்லா மில்லை யில்லில் லோர்க்கே.
61. தறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.
62. குன்றுடை நெடுங்கா டூடே வாழினும்
புன்றலைப் புல்வாய் புலிக்கஞ் சும்மே.
63. ஆரையாம் பள்ளத் தூடே வாழினும்
தேரைபாம் பிற்கு மிகவஞ் சும்மே.
64. கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டில்
கடும்புலி வாழுங் காடு நன்றே.
65. சான்றோ ரில்லாத் தொல்பதி யிருத்தலின்
தேன்றேர் குறவர் தேய நன்றே.
66. காலையு மாலையு நான்மறை யோதா
அந்தண ரென்போ ரனைவரும் பதரே.
67. குடியலைத் திரந்து கோலொடு நின்ற
முடியுடை யிறைவனு மூர்க்கனும் பதரே.
68. முதலுள பண்டங் கொண்டுவா ணிபஞ்செய்
ததன்பய னுண்ணு வணிகரும் பதரே.
69. வித்து மேரு முளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கு மேழையும் பதரே.
70. தன்மனை யாளைத் தாய்மனைக் ககற்றிப்
பின்பவட் பாராப் பேதையும் பதரே.
71. * * * *
* * * *

72. தன்னா யுதமுந் தன்கையிற் பொருளும்
பிறன் கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.

73. வாய்ப்பறை யாகவு நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்

74. பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.

75. மெய்யுடை யொருவன் சொன்மாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

76. இருவர்தஞ் சொல்லையு மெழுதரங் கேட்டே
இருவரும் பொருந்த வுரையா னாயின்
மனுநெறி முறையின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி யீர்வதோர் வாளா கும்மே.

77. பழியா வருவதுஉ மொழியா தொழிவது.

78. சுழியா வருபுன லலையா தொழிவது.

79. துணையோ டல்லது நெடுவழி போகேல்.

80. புணைமீ தல்லது நெடும்புன லேகேல்.

81. * * * *
* * * *

82. வழியே ஏகுக வழியே மீளுக.

83. இவைகா ணுலகிங் கியலா மாறே.

84. வாழியே நலனே வாழியே நலனே.

170387